விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 270 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 29 சனிக்கிழமை (14.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## திலீபன் நினைவேந்தலுக்கு
## தடை விதிக்குக

### யாழ்.நீதவான் நீதிமன்றில் பொலிஸாரால் மனுத் தாக்கல்



(யாழ்ப்பாணம்)

**தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணப் பொலிஸாரினால் யாழ்.நீதவான் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தத் தடை விதிக்கக் கோரி யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுப்பதாகவும் அன்றைய தினம் மனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செல்வராசா கஜேந்திரன் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரை மன்றில் முன்னிலையாகுமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.(ம-7)

## புதிய ஜனாதிபதியுடன் பணியாற்றத் தயார்

### சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையில் ஜனாதிபதியாக யார் தெரிவானாலும் அவருடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாகவும், இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு மதிப்பளிப்பதில் எப்போதும் அர்ப்பணிப்புடன் 15

## வேலணையில் விபத்து; தமிழ்ப் பொலிஸ் மரணம்

(யாழ்ப்பாணம்)

வேலணையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


நேற்று வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும், புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த கண்ணதாசன் எனும் பொலிஸ் உத்தியோகஸ்தரே உயிரிழந்துள்ளார்.

வேலணைப்பகுதியில் இருந்து அராலிச் 15

## அரியநேத்திரனுக்கு அச்சுறுத்தல்

### புலனாய்வு அறிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனுக்கு அச்சுறுத்தல் இருப்பதாகப் புலனாய்வு அறிக்கை தெரிவித்துள்ளது. 15



3ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப் 15

## பெப்ரவரி மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்குள் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு இறக்குமதிக்கான அனுமதி வழங்கப் 15

## வடக்கில் இரண்டு ஏற்றுமதி வலயங்கள் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)


வடக்கில் இரண்டு ஏற்றுமதி வலயங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ள மூன்று ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் இரண்டு வலயங்கள் நேற்று உத்தியோகபூர்வமாகப் பெயரிடப்பட்டன.

யாழ்ப்பாணம் காங்கேசன் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருள்மிகு மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலய அடிக்கல் நாட்டுவிழாவும் சங்கு ஸ்தாபனமும்

*அருள்மிகு மருதடி தான்தோன்றீஸ்வர அடியார்களுக்கு*

எதிர்வரும் 15.09.2024 ஞாயிற்றுக்கிழமை துவாதசித் திதியும், திருவோண நட்சத்திரமும் கூடிய காலை 9.03 மணி தொடக்கம் 10.33 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ் அடிக்கல் நாட்டு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான கௌரவ **அங்கஜன் இராமநாதன்** அவர்கள் வருகை தந்து மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கான அடிக்கல்லினை நாட்டவுள்ளார்.

ஆகவே அனைத்து அடியார்களும் இச்சங்கு வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு தங்களது கரங்களால் சங்கினை வைத்து அம்மனின் அருட்கடாச்சத்தினை பெறுவீர்களாக!.

குறிப்பு: சங்கு வைக்க விரும்பும் அடியார்கள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :**

**077 116 2449, 077 807 9717**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம்"

(1930)

மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலயம் (விநாசி கோயில்) வல்லிபுரம், புலோலி.

பரிபாலன சபையினர் 077 807 9717

# தேர்தல் பிரசாரங்கள் 18ஆம் திகதியுடன் நிறைவு

## தேர்தல்கள் ஆணைக்குழு

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் பிறகு, எந்தவொரு தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, பொது அல்லது தனியார் வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கர்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை அகற்றுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளுக்கு 6 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 48 மணித்தியாலங்களுக்குள் அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தேர்தல் கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

**New City கோழி Farm**

34 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- 24 மணிநேர சேவை
- புறோயிலர் இறைச்சி
  சில்லறை - 1000 /=
  10 Kg மேல் - 950 /=
- உயிருடன் புறோயிலர்
  1 Kg – 620 /=
- உயிருடன் தேவைப்படுபவர்கள் முதல்நாள் காலை 10 மணிக்கு முன்பு பதிவு செய்யவும்

(1935)

**New City கோழி Farm**

சின்னக்கடை மார்க்கட் முன்பாக குருநகர், யாழ்ப்பாணம்.

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரிலுள்ள பிரபல தொழில் நிறுவனமொன்றுக்கு கணக்கியல் அறிவுள்ள 02,03 வருடாங்கள் பயிற்சியுள்ள கணக்கு பதியுனர் தேவை. மேற்குறிப்பிட்ட தகுதியுடையவர்கள் ஆண், பெண் யாழ் நகரில் அண்மித்து வசிப்பவர்கள் கீழ்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(1936)

**077 773 0567**
**077 234 9933**

**காணி தேவை**

பூநகரி, மன்னார் பகுதிகளில் காணி தேவை.

தொடர்புகளுக்கு :

**077 374 4652**

(342)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.06.1947

மறைவு 27.08.2023

அமரர்

## ஆறுமுகம் துரைசிங்கம் (கோபால்)

அவர்களின் சிவப்பேறு குறித்த ஆண்டு திவச கிரியைகள் 14.09.2024 நாளை சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(C-1181)

வெண்புறா அருகாமை ஒழுங்கை
கைவேலி – புதுக்குடியிருப்பு

தகவல் : குடும்பத்தினர்
077 126 4233

# மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 12 - 1961



இறப்பு 13 - 09 - 2024

## வைரமுத்து இராசேந்திரம்

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து இராசேந்திரம் அவர்கள் 13.09.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் வசிகலா அவர்களின் பாசமிகு கணவரும் வைஸ்ணவி, யந்துர்சன்(பிரான்ஸ்), பிரவீனா, விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசமலர்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான கணேசராணி, மனதரன், பாலச்சந்திரன் மற்றும் ரவிச்சந்திரன் (ஆசிரியர் - யா/பெரியபுலம் ம.வி), ஜெயசுதா(கனடா) ஆகியோரின் சகோதரனும் புனிதராஜா, அமரர் ரஞ்சினிதாஸ் சாந்தகுமாரி, ரஜனி, சர்மிளா, சிவபாலன், காண்டீபன், அம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் பொபிதா, தினகரன், ஜீவகரன், ரஜிதா, பவிதா, பானுஜன், பாவனா, மதுஷன் ஆகியோரின் மாமனாரும் கம்சா, தர்சிகன், கிரிசாந், பிரசாந், மஞ்சுயன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.09.2024 நாளை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(1938)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி




இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வாக்காளர்கள் எவ்வாறு சரியாக வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தல் சவாலானது. விருப்பு வாக்கின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்ய வாய்ப்புகள் அதிகம். எனவே வாக்களிப்பு தொடர்பில் சரியான புரிதல் அவசியம்.

ஒருவேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்றால் அளிக்கப்படும் வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தவிர்த்து செல்லுபடியான வாக்குகளில் 50 வீதமான வாக்குகளைப் பெற வேண்டும்.


எந்தவொரு வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளை பெறாவிட்டால் முதலாவது, இரண்டாவது அதி கூடிய வாக்குகளை பெற்றவர்களை தெரிந்தெடுப்பர்.

ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்களிப்பு அட்டையில் உள்ள விருப்பு வாக்குகளுக்கு அமைய முதலிடங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு பகிர்வர். எனவே விருப்பு வாக்குகளே வெற்றியாளரை தீர்மானிக்கும் என்பதை நாம் உணர்ந்து வாக்களிப்போம்.




நீங்கள் ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், உங்களுக்கு விருப்பமான வேட்பாளரின் பெயருக்கு முன்னால் புள்ளடி (X) அடையாளம் இடுவதன் மூலம் உங்கள் வாக்கை பதிவு செய்யலாம்.

அல்லது




நீங்கள் இரண்டு வேட்பா ளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உங்கள் தேர்வின் அடிப்படையில் 1 மற்றும் 2 என இலக்கமிட்டு வாக்கை பதிவு செய்யலாம்.

நீங்கள் மூன்று வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உங்கள் தேர்வின் அடிப்படையில் 1, 2 மற்றும் 3 என இலக்கமிட்டு வாக்கை பதிவு செய்யலாம்.



ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளருக்கு புள்ளடி(X) இடுதல் கூடாது.



ஒரு வேட்பாளருக்கு புள்ளடி (X) என்றும் மற்றைய வேட்பாளர்களுக்கு எண்களையும் இடுதல் கூடாது.

# ஜனாதிபதி தேர்தலை கண்காணிக்க

## 9 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் வருகை

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 9 நாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க அவர்கள் வருகை தந்துள்ளதாக அதன் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் அவர்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதில் சார்க் வலய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ரஷ்ய கண்காணிப்பாளர்களும் இந்த கண்காணிப்பு குழுக்களில் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உயர்தரப் பரீட்சை நவம்பர் 20 இல் ஆரம்பம்

## பரீட்சை ஆணையாளர் நாயகம்



(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரித்துள்ளார்

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிலையில், 2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.(நி-6)

# வாக்குப்பதிவின் போது கையடக்கத் தொலைபேசிகளுக்கு தடை

## தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவின் போது கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச் செல்வதைத் தடை செய்ய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த தீர்மானமானது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் மற்றும் வாக்காளர்களுக்கும் செல்லுபடியாகும் என ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஜனாதிபதிவேட்பாளர்கள் வாக்களிக்கும் போது புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எடுக்க வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தபால்மூல வாக்களிப்பின் போது கையடக்கத் தொலை



பேசிகளை எடுததுச் செல்ல அனுமதித்தமையினால் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## போலிக்கடவுச்சீட்டுடன்

# தாய்லாந்து எல்லையில் கைதான இலங்கையர்

(மலேசியா)

மலேசியா - தாய்லாந்து எல்லைச் சோதனைச் சாவடியில் வைத்து போலி மலேசியக் கடவுச்சீட்டை வைத்திருந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



21 வயதான இவர், 'ராஜா டெனி டெனிஸ்' என்ற பெயர் கொண்ட கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தாய்லாந்திற்கு செல்ல முயன்றபோது, மலேசியாவின் குடிவரவு, சுங்கம், தனிமைப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டதாக அதன் இயக்குனர் முகமட் ரிட்சுவான் முகமட் ஜைன் தெரிவித்துள்ளார்.

மலேசிய குடிமகனாக தம்மை ஆள்மாறாட்டம் செய்து தாய்லாந்திற்கு செல்ல முயன்ற போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந் நிலையில், செல்லுபடியாகும் பயண ஆவணம் இன்றி நாட்டிற்குள் நுழைந்து தங்கியிருந்தமைக்காக சந்தேகநபர் குடிவரவு சட்டத்தின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ரிட்சுவான் கூறியுள்ளார்.

தாய்லாந்து அதிகாரிகளுக்கும் தமக்கும் இடையிலான மூலோபாய ஒத்துழைப்பின் விளைவாகவே குறித்த இலங்கையர் கைது செய்யப்பட்டதாக மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# டிராவிஸ் ஹெட் சரவெடி
# ஆஸி அசத்தல் வெற்றி



டிராவிஸ் ஹெட்டின் அதிரடி ஆட்டம் கை கொடுக்க முதல் ரி-20 போட்டியில் இங்கிலாந்தை 28 ரண் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது அவுஸ்திரேலியா.

இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலியா 3 போட்டி கொண்ட "ரி-20" தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி சவுத்தாம்ப்டனில் நேற்று முன்தினம் நடந்தது. "டாஸ்" வென்ற இங்கிலாந்து பீல்டிங் தேர்வு செய்தது.

அவுஸ்திரேலிய அணிக்கு டிராவிஸ் ஹெட், மாத்யூ ஷார்ட் ஜோடி சூப்பர் தொடக்கம் கொடுத்தது. சாம் கர்ரான் வீசிய ஓவரில் 30 ரன் விளாசிய ஹெட், 19 ஆவது பந்தில் அரைசதம் அடித்தார். முதல் விக்கெட்டுக்கு 6 ஓவரில் 86 ரண் சேர்த்த போது, ஹெட் (59 ரன், 23 பந்து) அவுட்டானார்.

ஷார்ட் (41), இங்லிஸ் (37) கை கொடுத்தனர். கப்டன் மிட்சல் மார்ஷ் (2) நிலைக்கவில்லை. அவுஸ்திரேலிய அணி 19.3 ஓவரில் 179 ரண்ணுக்கு ஓல் அவுட்டானது.


பின் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு கப்டன் பில் சால்ட்(20), வில் ஜாக்ஸ் (6), ஜோர்டான் காச் (17), லிவிங்ஸ்டன் (37), சாம் கர்ரான் (18) பெரிய அளவில் சோபிக்கவில்லை. இங்கிலாந்து அணி 10.2 ஓவரில் 151 ரன்னுக்கு ஓல் அவுட்டாகி தோற்றது. "ரி-20" அரங்கில் "பவர் பிளே" ஓவருக்குள் (முதல் 6) அதிக அரைசதம் விளாசிய வீரர்களில், 4ஆவது இடத்தை பின் ஆலன் (நியூசி.), குர்பாசுடன் (ஆப்கன்) பகிர்ந்து கொண்டார்.ஹெட். இவர்கள் 7 முறை அரைசதம் அடித்தனர். முதல் 3 இடத்தில் கெய்ல் (10, வெ.இண்டீஸ்), ஜேசன் ராய் (10, இங்கிலாந்து), வார்னர் (9, ஆஸி.,), பால் ஸ்டிர்லிங் (8, அயர்லாந்து), அலெக்ஸ் ஹேல்ஸ் (8, இங்கிலாந்து) உள்ளனர். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 160-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 180 | 200 | 250 |
| தக்காளி | 200 | 220 | 250 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 240 | 150-200 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 250 | 280 | 300 | 280 | 280 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 60 | 120 | 80 | 80 | 200 |
| வாழைக்காய் | 250 | 220 | 240 | 200-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 150 | 350 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 260 | 240 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 120-150 | 240 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 120-150 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 320 | 300 | 350 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 80-120 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 450 | 450 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200 | 250-300 | 200 |
| போஞ்சி | 250 | 300 | 350 | 300 | 400 |
| கத்தரி தம்புள்ள | 180 | 150 | -- | -- | 240 |
| கீரை - 1 பிடி | 130 | 150 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 120 | 90-130 | 100-140 |
| இராசவள்ளி | -- | 850 | -- | 650 | 800 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 130 | 150 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 140 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3220


### மதுரன்





### கருணிகா





### ராகினி





### மாதுளன்




### சதீஸ்




### பிரணவன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக வரி அறவீட்டினால் மக்களின் ஜீவனோபாயம் பாதிப்பு

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்



(கண்டாவளை)

இந்த நாட்டில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொறிமுறைகளோ அல்லது சட்டமோ கிடையாது. எங்களுடைய வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாத அளவுக்கு வரியும் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற ஜீ.எல் பீரிஸ் நேற்று முன்தினம் பிற்பகல் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவ கட்சியினுடைய ஸ்தாபகருமாகிய முருகேசு சந்திரகுமார் மற்றும் அவரது குழுவினரை கிளிநொச்சியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடி தொடர்ந்து நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் பெரும் பணம் பலம் படைத்தவர்களிடம் 15, 20 வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான வரிகளையும் அறவிடப்படாது வாழ்ந்து வருகின்றனர்.பகலில் பெரிய அளவில் பொதுமக்களிடமிருந்து வரிகளை அறவிட்டு அதனை இரவிலே கொள்ளை இட்டுச் செல்கின்றார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் ஏற்ற ஒரு பொறிமுறையை உருவாக்கக்கூடிய நல்ல ஒரு தலைமைத்துவமாக சஜித் பிரேமதாஸ் காணப் படுகின்றார். எனவே அவருக்கு வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்வதன் மூலம் நாட்டை ஒரு நல்ல நிலையில் முன்னேற்ற முடியும் என தெரிவித்தார். (நி-6)

# கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் விற்பனை கண்காட்சி



(முறிகண்டி)

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் வலிமையான பெண்களுக்கு வலுவூட்டும் கரங்கள் எனும் தொனிப்பொருளில் விற்பனைக் கண்காட்சி ஒன்று நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பெண்களால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், விற்பனையும் இடம்பெற்றது.

நிகழ்வில் மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள், உற்பத்தியாளர்கள், நிறுவன பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-100-316)


# நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரியின் வணிகப் பாட ஆசிரியர்

அமரர்.

**நடராசா பாலச்சந்திரன்**

அவர்கள் 15.08.2024 அன்று சிவபதமடைந்தார்.



ஊற்றெனவே வணிகமதை
உவப்போடு போதித்தே
ஏற்றமுற மாணவரை
ஏணியாகச் சுமந்தவரே!
காற்றாகிக் கரைந்தே
கனவாகிப் போனதுமேன்?
தேற்றுவார் எவருமில்லை
தெய்வமே திரும்பி வாரும்!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-1177)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


# இராசிபலன்

14.09.2024
ஆவணி, 29 சனிக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 5.01மணிவரை

உத்தராடம் பிற்பகல் 5.57 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணி வரை
இராகுகாலம் 09.03-10.33மணிவரை

பரிவர்த்தன ஏகாதசி விரதம்.
சந்திராஷ்டமம்
ரோகிணி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** - கனவுப்பலிதமுண்டு, நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** - அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** - வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள்.

**மகரம்** - வழிபாட்டால் வளர்ச்சி கூடும், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் ஏற்படலாம்.

**ரிஷபம்** - சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**சிம்மம்** - நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள்.

**விருச்சிகம்** - உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** - உறவினர்கள் நலன் கருதிய சுப விரயங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் ,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,

**மிதுனம்** - மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது,ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** - தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும் நாள்.

**தனுசு** - ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வில் கலந்து கொள்ளும் வாய்ப்

**மீனம்** - ஏக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள் பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

ஒருவனை அவனது நண்பனைக் கொண்டு அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சாமக்கோழி' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆற்றுகை கழகம் வழங்கும் கரையோர வாழ்வின் பிரதியெடுப்பான சாமக்கோழி நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப 5 மணிக்கு கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கத்தில் குறித்த கழகத்தின் தலைவர் கு.அற்புதன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓவியத்துறைத் தலைவர் வ.பாலமுருகன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் இ. கிருஷ்ணகுமார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சன்.சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் தமிழ்த் தாய்வாழ்த்து- யாழ்ப்பாணர் ஆற்றுகை கழகத்தின் உப செயலாளர் செ.வசன்பேர்க், வரவேற்புரை- பொருளாளர் எஸ்.ஜே. ஸ்ரலின், தலைமை உரை-உப தலைவர் அ.றஜீவ், வெளியீட்டுரை- தலைவர் கு.அற்புதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நயப்புரையினை வலம்புரி நாழிதழ் பிரதம பத்திரிகை ஆசிரியர் ந. விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். ஏற்புரையினை யாழ்ப்பாணர் ஆற்றுகை கழக ஊடக நிர்வாக ம. றெமி ஆனந்த் மற்றும் நன்றி உரையினை செயலாளர் பி.டினேஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர். சாமக்கோழி புத்தகத்தின் முதல் பிரதியினை சட்டத்தரணி ஸ்ரலிஸ்லாஸ் செலஸ்ரின் பெறவுள்ளார்.(நி)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப்பிள்ளையார் ஆலய மஹோற்சவம் கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ் உற்சவத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என ஆதீனகர்த்தா சிவஸ்ரீசபாரத்தினம் பரமேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6)

# மனவளக் கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.எஸ்.ராஜேஸ்வரி வழங்கவுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

# தெல்லியூர் துர்க்காதேவிக்கு இன்று தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவந்தனில் இன்று சனிக்கிழமை தேர்த்திருவிழா காலை 9 மணிக்கு இடம்பெறும்.

இதன்போது துர்க்கை அம்மன் தேரில் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார்.

குறித்த மஹோற்சவத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு துர்க்கா புஷ்கரணி தீர்த்தக்கேணியில் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளது. (நி-6)

# தமிழர் தரப்பினது ஒற்றுமையை வெளிக்காட்டவேண்டிய தருணம்

## ஊடக சந்திப்பில் சட்டத்தரணி மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விருப்பங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றாத தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களிக்காது, தமிழர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தி தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என சட்டத் தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் எமக்கு என்ன தேவை என கூறியுள்ளோம். ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு எந்த சுபீட்சமும் இல்லை.

2009ஆம் ஆண்டுக்கு பிறகு தமிழ் மக்கள் மத்தியில் பல பிளவுகள் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு பிளவு பட்டுள்ள எங்களுடைய தமிழ் இனத்தை ஒன்றிணைக்க வேண்டும்.

அதற்காகவே தமிழ் தேசிய கட்சிகளில் 7 தமிழ் அரசியல் கட்சிகள், கடற்தொழிலாளர்கள் அமைப்புக்கள், உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் உள்ளடங்கிய 80 சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தி உள்ளோம்.

நாம் எம்மை பொருளாதார ரீதியாக முன்னேற்ற எங்களுடைய கைகளுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும். அதன் ஊடாகவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாம் கொண்டு வர முடியும்.எனவே தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை காட்ட தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(நி-6-33)

# 130 லீற்றர் கோடாவும் 24 லீற்றர் கசிப்பும் மீட்பு


## பெண் ஒருவர் கைது

(தருமபுரம்)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது 24 லீற்றர் கசிப்பும், 130 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் வீடொன்றின் பின்புறமாக சூட்சுமமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து 24 லீற்றர் கசிப்பும் 130 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் மற்றும் தடய பொருட்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (நி-6-316)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஊடாக யாழ்.சிறைச்சாலையின் சிறைக் கைதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைக்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொலைக்காட்சி அன்பளிப்புச் செய்யப்பட்டது. (படம்-சுபேசன்)

# சஜித்தை ஆதரித்து மன்னாரில் ஜலனி பிரேமதாச பரப்புரை

(மன்னார்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து அவரது மனைவி ஜலனி பிரேமதாச மன்னார் முசலியில் பிரதேச செயலாளர் பிரிவில் பரப்புரையில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த பரப்புரை நிகழ்வானது நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீனின் அழைப்பின் பேரில் மன்னார் முசலி பொற்கேணியில் பிரதேசத்திற்கு வருகை தந்து அவர் அங்கு மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன், மக்கள் சக்தியின் அமைப்பாளர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,பெண்கள் அமைப்புகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-285)

# வாக்களிக்கும் முறை; துண்டுப் பிரசுரம் வெளியீடு



(தருமபுரம்)

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் அடங்கும் யாழ்.மற்றும் கிளிநொச்சி மக்களை வாக்களிப்பதன் முறையை தெளிவூட்டும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வெளியிட்டு வைக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு பொறுப்பான உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.சீ. அமல்ராஜ் வெளியிட்டு வைக்க முதலாவது துண்டுப் பிரசுரத்தை கிளிநொச்சி மாவட்டபதில் அரச அதிபர் எஸ்.முரளீதரன் பெற்றுக்கொண்டார்.

குறித்த துண்டுப்பிரசுரமானது மக்கள் சரியான முறையில் வாக்களிப்பது தொடர்பான தெளிவூட்டல் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த துண்டுப் பிரசுரமானது உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவையாளர்கள் மூலம் கிராம மக்களுக்கு வழங்கி வாக்களிப்பு முறை தொடர்பாக தெளிவூட்டப்படவுள்ளது. (நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்களை
## அலட்சியப்படுத்தும் சில பொலிஸார்
### பவ்ரல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**பொலிஸ் தலைமையகத்தை சேர்ந்த சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் சட்டங்களை புறக்கணிக்கின்றனர் என பவ்ரல் அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.**

PAFFREL

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பிற்கு முன்னதாக நாட்டில் பொலிஸ்மா அதிபரோ அல்லது பதில் பொலிஸ்மா அதிபரோ இல்லாத போதிலும் பொலிஸார் சட்டம் ஒழுங்கை பேணுவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளை வரவேற்றுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல்,

சில அதிகாரிகள் தேர்தல் சட்டங்களை நடைமுறைப் படுத்த தவறுவது குறித்து கரிசனை வெளியிட்டுள்ளது.

பதுளை, வவுனியாவின் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்த தவறுகின்றனர் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவருக்கு தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் பொலிஸ் தலைமையகத்தின் தலைமை பொலிஸ் பரிசோதகர் சட்ட விரோத சுவரொட்டிகள் போன்றவற்றை அகற்றுவது குறித்து அக்கறை காட்டவில்லை, தேர்தல் அதிகாரிகளின் உத்தரவுகளை அலட்சியம் செய்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (நி)


## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | -Rs.3000.00 |
| மேசன் உதவியாளர் | -Rs.2000.00-2500.00 |
| பெயின்ரர் | -Rs.2500.00 |
| பெயின்ரர் உதவியாளர் | -Rs.2000.00 |
| வெல்டர் உதவியாளர் | -Rs.2000.00 |
| வயறிங் | -Rs.2500.00-3000.00 |
| பிளமிங் | -Rs.2500.00-3000.00 |
| தச்சு வேலை | -Rs.2500.00-3000.00 |

(அனுபவமுள்ளவர்கள்)

**தினசரி சம்பளம் வழங்கப்படும்.**
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு- 077 724 5399
(காலை 8.30-மாலை 5.00 வரை).
யாழ்ப்பாணம் (1920)

## வேலையாட்கள் தேவை

1. தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO) HND or NCT-Civil
2. கணிய அளவையியலாளர் (QS) HND or NCT QS
3. உதவி கணிய அளவையியலாளர் (AQS)
4. கணக்காளர் (Accountant)
5. கணக்கு உதவியாளர் (Assistant Accountant)
6. அலுவலக உதவியாளர் (Office Assistant)

சுயவிபரக்கோவையை Whatsapp/ Email மூலம் அனுப்பி வைக்கவும்.
077 724 5399 (WhatsApp)
**dreambuild2024@hotmail.com**
யாழ்ப்பாணம். (1920)


# சீதா அரம்பேபொல பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச் சராக சீதா அரம்பேபொல பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள் ளார். பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச் சராக நியமிக்கப்பட்ட விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல, இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பத விப்பிரமாணம் செய்துகொண்டார்.

அத்துடன் சீதா அரம்பேபொல, சுகாதார இராஜாங்க அமைச்சராக வகிக்கும் பதவிக்கு மேலதிகமாக, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக் கப்பட்டுள்ளார். (நி-6)

# வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும் பணி இன்றுடன் நிறைவுபெறும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை 80 வீத உத்தி யோக பூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக் கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அருகாமையிலுள்ள தபால் அலுவலகங்களில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி தமது வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (சி-336)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.


இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.


யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# வெல்க தமிழ்
## சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
**கட்சிகளைக் கடந்து**
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!



எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.



(சி-018) தமிழ்ப் பொது வேட்பாளர்
**பா.அரியநேத்திரன்**
தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# கமலா ஹாரிஸுடன் மீண்டும் நேரடி விவாதம் கிடையாது

### டொனால்ட்ரம்ப் உறுதி





(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனாலட் ரம்ப் போட்டியிடுகிறார்.

இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை நேருக்கு நேர் விவாதம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த நிலையில் மேலும் ஒரு விவாதத்தில் சந்திக்க கமலா ஹாரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனால், டொனால்ட ரம்ப், ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை கமலா ஹாரிஸ் உடன் நேருக்கு நேர் விவாதம் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் கமலா ஹாரிஸின் வேண்டுகோள் செவ்வாய்க்கிழமை விவாதத்தில் அவர் தோல்வியடைந்ததை சுட்டிக்காட்டுகிறது. அதை சரி செய்வதற்கான மீண்டும் ஒரு விதாதத்தை எதிர் நோக்கின்றார் என ட்ரம்ப் தெிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை விவாதத்தின் போது பொருளாதாரம், குடியேற்றம். கருக்கலைப்பு தடை ஆகியவற்றை பற்றி இரண்டு பேரும் காரசார விவாதம் நடத்தினர். ஒரு கட்டத்தில் அமெரிக்காவை சீர் குலைத்தவர். சீனாவுக்கு அமெரிக்காவை விற்றவர் என டொனால்ட் ட்ரம்ப்- ஐ கமலா ஹாரிஸ் கடுமையாக சாடினார்.

அதேவேளையில் கமலா ஹாரிஸ் ஒரு மார்சிஸ்ட். அவர் இஸ்ரேலை வெறுக்கிறார் என ட்ரம்ப் குற்றம்சாட்டினார். (நி-6)

# யூரேனியம் செறிவூட்டல் இடத்தை பார்வையிட்ட கிம்

### உலக நாடுகளுக்கு சவாலாகும் வடகொரியா



(பியாங்யாங்)
உலகின் வல்லரசு நாடாக திகழும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளுக்கு வடகொரியா கடும் சவாலாக விளங்கி வருகிறது. அதற்கு முக்கிய காரணம் அணு ஆயுதம் தான்.

எப்போதெல்லாம் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா கொரிய தீபகற்பத்தில் போர்ப் பயிற்சி மேற்கொள்கிறதோ அப்போதெல்லாம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து பதிலடி கொடுப்போம் என வடகொரியா அச்சுறுத்தும்.

அமெரிக்காவின் மையப் பகுதியை சென்று தாக்கும் அளவிற்கு தங்களிடம் அணுஆயுதம் இருப்பதாக வடகொரியா சொல்லி வருகிறது. எங்கள் நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணுஆயுதங்களை பயன்படுத்துவதில் தயக்கம் காட்ட மாட்டோம் என வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சமீபத்தில் அணுஆயுதம் தயாரிப்பதற்கான யுரேனியம் செறிவூட்டல் பணிகளை இன்னும் துரிதப்படுத்துமாறு கிம் ஜாங் உன் வலியுறுத்திருந்தார். இது வழக்கம் போல் கிம் ஜாங் உன்னின் மிரட்டலாக இருக்கும் என உலக நாடுகள் நினைத்துக் கொண்டிருந்தன.

இந்த நிலையில் யுரேனியம் செறிவூட்டல் அதிக அளவில் உற்பத்தி செய்யும் வசதிகளை வடகொரிய ஜனாதிபதி பார்வையிடுவது போன்ற படம் வெளியாகியுள்ளது.

யுரேனியம் செறிவூட்டல் மையத்திற்கு அவர் தற்போது சென்றாரா? என்பது உறுதியாகவில்லை. என்றபோதிலும் வடகொரிய அணு ஆயுதங்களை அதிக அளவில் பெருக்குவதில் உறுதியாக உள்ளது என்பது நிரூபணம் ஆகியுள்ளது.2006 ஆம் ஆண்டு முதன்முறையாக வட கொரிய அணுஆயுக சோதனை மேற்கொண்டது. அப்போது ஐ.நா. வடகொரியாவுக்கு தடைவிதித்தது. அதன்பின் முதன்முறையாக யுரேனியம் செறிவூட்டல் வசதியை வடகொரியா தற்போது வெளியிட்டுள்ளது.

நவம்பர் மாதம் நடைபெறும் அமெரிக்க தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்த இந்த படத்தை பதிவிட்டிருக்கலாம். வரவிருக்கும் அமெரிக்க அரசு வடகொரியாவை அணுஆயுதமற்ற நாடாக்குவது சாத்தியமற்றது என்பதை உணர வைக்க இப்படி செய்திருக்கலாம் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

எங்களிடம் அணு ஆயுதம் உள்ளது என்பதை மற்ற நாடுகளில் அறிந்து கொள்வதற்கான தகவலாக இருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (நி-6)

# எங்க
# பதில

### மேற்கத்தேய

(மொஸ்கோ) —
“ நீண்ட தூரம்
தாக்குதல் நடத்த
நாடுகள் ரஷ்யாவு
ஜனாதிபதி புடின்

உக்ரைன் மீது நீண்ட நாட்களாக ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. மேற்கத் தேய நாடுகள் உதவியுடன் இதற்கு உக்ரைன் பதிலடி கொடுத்து வருகிறது. இச்சூழ்நிலையில் இந்த போரை முடிவுக்கு கொண்டு வர, ரஷ்யாவிற்குள் நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை வழங்கும்

படி அ
கத்தி
ஜனா
யுறுத்
இ
கூறி
தியா
ஏவுக
வற்
றை
கிறது

### ஜேர்மனியின் க
### உடைந்து வி



### விமான நிலைய
# அதானிக்கு
## கென்யாவில்

(நைரோபி)
கென்யாவின் நைரோபி விமான நிலையத்தை அதானி நிறுவனத்திடம் குத்தகைக்கு விடும் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து விமான நிலைய ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியாவில் பல்வேறு விமான நிலையங்களின் பராமரிப்பு ஒப்பந்தத்தை அதானி குழுமம் எடுத்திருப்பதுபோல், கென்ய அரசுடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களை அச்சுறுத்தினால்
# லடி பலமாக இருக்கும்!

## தய நாடுகளுக்கு புடின் எச்சரிக்கை

**ரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பயன்படுத்தி த்த உக்ரைனை அனுமதித்தால், அது மேற்கத்தேய ாவுடன் நேரடியாக மோதுவதற்கு சமம்” என ரஷ்ய ன் தெரிவித்துள்ளார்.**



படி அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வலியுறுத்தி வருகிறார்.

இது தொடர்பாக புடின் கூறியதாவது, ரஷ்ய பிராந்தியங்கள் மீது ஆளில்லா ஏவுகணைகள் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி உக்ரைன் தாக்குதல் நடத்தி வருகிறது.

மேற்கத்தேய நாடுகளின் ஆயுதங்களை வைத்து தாக்குதல் நடத்தும் திறன் உக்ரைன் ராணுவத்திற்கு கிடையாது. அவர்களால் முடியாது. இந்த ஏவுகணைகளை, செயற்கை கோள் மூலமான உளவுத் தகவல்களை பெறாமல் பயன்படுத்த முடியாது. அந்த வசதிகள் உக்ரைனிடம் இல்லை.

ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா அல்லது நேட்டோ செயற்கைகோள்களை தான் உக்ரைன்பயன்படுத்தவேண்டும்.

அடுத்ததாக, இந்த ஏவுகணைகளுக்கு தேவையான சில அதிநவீன கருவிகள் நேட்டோ அமைப்பிடம் தான் உள்ளது. உக்ரைனிய வீரர்களால் பயன்படுத்த முடியாது. எனவே, இதனை உக்ரைன் பயன்படுத்துகிறதா இல்லையா என்ற கேள்வியை விட, இந்த போரில் நேட்டோ படைகள் நேரடியாக ஈடுபடுகிறதா அல்லது இல்லையா என்பதே முக்கியம்.இந்த ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்த அனு மதித்தால் அது போரின் தன்மையை மாற்றும். அது நேட்டோ படைகள், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகள் ரஷ்யாவுடன் நேரடியாக மோதுவதற்கு சமம். இதன் மூலம் எங்களுக்கு வரும் அச்சுறுத்தல்களுக்கு உரிய பதிலடியை கொடுப்போம் என அவர் தெரிவித்தார். (நி-6)

## கரோலா-பாலம்
## விழுந்தது



(பெர்லின்)

கிழக்கு ஜேர்மனியின் சக்சோனி மாகாணம் டிரெஸ்டன் நகரில் எல்பே ஆறு ஓடுகிறது. பழைய டிரெஸ்டன் மற்றும் புது டிரெஸ்டன் நகரங்களை இணைக்கும் வகையில் எல்பே ஆற்றின் குறுக்கே 100 மீற்றர் அளவில் "கரோலா" பாலம் கட்டப்பட்டிருந்தது.

கார்கள், கனரக வாகனங்கள் போக்குவரத்திற்காக ஒரு பகுதியும். டிராம்கள், சைக்கிள்கள் பாதசாரிகள் செல்வதற்காகவும் இந்த பாலத்தில் வசதி செய்யப்பட்டிருந்தது. நகரின் முக்கிய போக்குவரத்து அம்சமாக இந்த பாலம் விளங்குகிறது.

இந்தநிலையில் திடீரென இந்த பாலம் பல துண்டுகளாக உடைந்து நொறுங்கியது. இரவில் இந்த விபத்து ஏற்பட்டதால் யாருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.

தகவலறிந்த நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஆய்வு செய்தனர். பாலம் உடைந்ததன் காரணமாக அங்கு போக்குவரத்து திருப்பி விடப்பட்டுள்ளது.

இதனால் சாலை, டிராம் மட்டுமின்றி சுற்றுலா படகுகள் போக்குவரத்தும் தடைப்பட்டது. (நி-6)

## ஈரானின் சரக்குக் கப்பலில் ரஷ்யாவிற்கான ஏவுகணைகள்



(மொஸ்கோ)

ஈரான் தனது ஏவுகணைகளை ரஷ்யாவிற்கு அனுப்பியதைத் தெளிவுபடுத்தும் புதிய செயற்கைக் கோள் படங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் செயற்கைக்கோள் படங்களில், செப்ரெம்பர் 4 அன்று ரஷ்யாவில் உள்ள போர்ட் ஒல்யா துறைமுகத்தில் இந்த கப்பல் இருந்ததை உறுதிசெய்துள்ளது.

இந்த ஏவுகணைகள் உக்ரைனில் தாக்குதல் நடத்த பயன்படுத்தப்படலாம் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரான் மற்றும் ரஷ்யா இடையேயான பாதுகாப்பு கூட்டாண்மை வளர்ச்சியடைந்து வருவதைக் காட்டும் இந்த செயற்பாடு, உக்ரைனில் நடக்கும் போரின் மிகப்பாரிய படிநிலையாகக் கருதப்படுகிறது.

இந்த ஏவுகணைகள் உக்ரைனுக்கு மிகப்பாரிய ஆபத்தை உருவாக்குவதுடன், 2023 இறுதியில் ஈரான் - ரஷ்யா இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் வழங்கப்படலாம் என்று கணிக்கப்படுகிறது. (நி-6)

## லைய ஒப்பந்தம்
## க்கு எதிராக
## ல் போராட்டம்

கையெழுத்திட்டுள்ளது. அந்த வகையில், ஜோமோ சர்வ தேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு நிர்வகிக்கும் ஒப்பந்தத்தை அதானி குழுமத்திற்கு சுமார் ரூ.1,500 கோடிக்கு தர கென்யா அரசு முடிவு செய்துள்ளது.

இதனால் உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும் என கூறி ஊழியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனை யடுத்து விமான நிலைய ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏராளமான விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், பயணிகள் கடும் சிரமத்துக்கு ஆளாகினர்.இந்த நிலையில், இந்தியாவின் அதானி குழுமம் ஜோமோ சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுக்க முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தை கென்யா உயர் நீதிமன்றம் தற்காலிகமாகத் தடை விதித்துள்ளது.

இதுதொடர்பாக கென்யா மனித உரிமைகள் ஆணையம் ஆகியவை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன.

இந்த வழக்கு விசாரணையின்போது கிழக்கு ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய விமானப் போக்குவரத்து மையமான ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையத்தை 30 ஆண்டுகள் குத்தகை க்கு வழங்கினால், வேலை இழப்புகள், நிதி ஆபத்து உள்ளிட்டவை ஏற்படும் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து நீதிமன்ற வழக்கு முடிவடையும் வரை அந்த ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை நம்பவேண்டாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்புகள் நிறைவடைந்த பின்னர் வெளியாகின்ற உத்தியோகபூர்வ பெறுபேறுகளை மாத்திரமே நம்புமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொது மக்களைக் கோரியுள்ளது.**

அத்துடன் உத்தியோகபூர்வமற்ற முடிவுகளை வெளியிடுவதிலிருந்து விலகி இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.வாக்கு எண்ணும் நிலையங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களது பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும்.

அவர்கள் வாக்கு எண்ணும் பணிகளை அவதானித்து, அதிகாரிகள் கூறுகின்ற எண்ணிக்கைகளை அதன் பின்னர் ஏற்படுகின்ற சீர்திருத்தங்களைக் கணக்கில் கொள்ளாமல் தெளிவற்ற விபரங்களை வெளியிடக்கூடும். இவ்வாறான தெளிவற்ற உத்தியோகபற்றற்ற விபரங்கள், உத்தியோகபூர்வ பெறுபேறுகளிலிருந்து வித்தியாசமாக இருக்கவும் கூடும்.

எனவே பொதுமக்கள் தேர்தல்கள் ஆணைக் குழுவினால் இறுதியாக உறுதி செய்யப்பட்டு வெளியிடப்படுகின்ற முடிவுகளை மாத்திரமே நம்ப வேண்டும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவ சுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்தார். (நி-6)

# வரி வருமானம் 28.5% ஆக உயர்வு

(கொழும்பு)

இவ்வாண்டின் முதல் எட்டு மாதங்களில் வரி வருமானம் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 28.5% அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு ஜனவரி முதல் ஓகஸ்ட் இறுதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 12,29,245 மில்லியன் ரூபாய் வரி வருமானத்தை ஈட்டியுள்ளது.

கடந்த வருடம் இந்த காலப்பகுதியில் 9,56,418 மில்லியன் ரூபாயை மாத்திரம் ஈர்க்க முடிந்தது.

கூட்டு நிறுவனம் மற்றும் கூட்டு நிறுவனம் அல்லாத வற்றின் வருமான வரி, பெறுமதி சேர் வரி, சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி, பந்தயம் மற்றும் சூதாட்ட வரி, பங்கு பரிவர்த்தனை வரி மற்றும் பிற வகை வரிகள் போன்றன இந்த வருமான அதிகரிப்புக்கு காரணிகளாக அமைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# வாக்குப் பெட்டியுடன் செல்லும் வாகனத்தை பின்தொடர வாய்ப்பு

(கொழும்பு)

வாக்குச் சாவடியிலிருந்து வாக்கு எண்ணும் நிலையத்திற்கு வாக்குப்பெட்டிகளை கொண்டு செல்லும் வாகனத்தைப் பின்தொடர்ந்து செல்ல வேட்பாளர்களின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, வாக்குப்பதிவு நிலையத்திலிருந்து வாக்கு எண்ணும் நிலையத்திற்கு அருகிலுள்ள கடைசி பொலிஸ் நிலையம் வரை வாக்குப்பெட்டிகளை ஏற்றிச் செல்லும் வாகனத்தை பின்தொடர்ந்து செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு செய்ய வேண்டியிருந்தால், சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடியின் பெயர், பின்தொடரும் வாகனத்தின் எண் மற்றும் வாகனத்தில் உள்ள பிரதிநிதியின் பெயர் உள்ளிட்ட விரிவான அறிக்கையை அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரால் மூன்று நாட்களுக்கு முன்னர் மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு வழங்க வேண்டும்.

அதற்காக வழங்கப்படும் வாகன உரிமத்தை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடியின் மூத்த வாக்குச்சாவடி அலுவலரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாக்குப்பதிவு முடிந்து வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட வாக்குப் பெட்டி எந்த மாற்றமும் இன்றி வாக்கு எண்ணும் மையத்தில் ஒப்படைக்கப்படுமா என சில அரசியல்வாதிகள் மற்றும் வேட் பாளர்கள் சந்தேகம் தெரிவித் ததையடுத்து இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி-6)

# அதிக விலைக்கு முட்டை விற்பனை

## வியாபாரிக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

(கொழும்பு)

குருநாகல், மாதவ பிரதேசத்தை சேர்ந்த முட்டை வியாபாரி ஒருவருக்கு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச சில்லறை விலையை விட, அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த குற்றச்சாட்டிலே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.இவ்வாறு கைது செய்யப்பட்டவர், பிலெஸ்ஸ நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப் பட்ட 6 மாத கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தயார் ஐ.எம்.எப்



(கொழும்பு)

நாட்டு மக்களினால் தெரிவு செய்யப்படுகின்ற புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது மக்களினால் தீர்மானிக்கப்பட வேண்டியதொன்று என்றும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை தொடர்பிலான மூன்றாவது மீளாய்வு நடவடிக்கைகள், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முன்னெடுக்கப்படும் என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் ஜூலி கொஸாக் தெரிவித்துள்ளார்.ஜனாதிபதித்தேர்தலின் முடிவுகளின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். இலங்கை, வரலாற்றில் எதிர்நோக்கிய மிக மோசமான நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடுமையான முயற்சியில் வென்றெடுக்கப்பட்ட விடயங்களை இலங்கை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்பு வரையறுக்கப்பட்டதாகவும் அரசாங்கத்திற்கும் கடன் வழங்குநர்களுக்கும் இடையிலேயே பிரதான இணக்கப்பாடுகள் எட்டப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)




# பூமியிற் பிறந்த மக்கள் அடையும் மாட்சிமைப்பட்ட பயன் இன்று தெல்லிப்பளை துர்க்கை தேர்வலம் வர நாம் அபிராமி அந்தாதி ஓதுவோம்

**மகிடன் தலை மேல் அந்தாதி- அ-அந்தாதி-08**

சுந்தரி எந்தை துணைவி என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே

நானிலத்தில் பல பிறவியை எடுத்துத் திண்டாடியது போதாதா? பந்தபாசக் கட்டுக்களை நீக்க தேவி சிந்துர வண்ணத்தினளாக வருகிறாள். என்? துறவையும், தியாகத்தையும் உணர்த்தும் நிறம் சிவப்பு நிறம் அன்றோ.பாசமனைத்தையும், வேரோடு களைந்து, **பாசத் தொடரையெல்லாம் வந்தரி" கைத்தலைத்தால் மலர்த்தாள் என் கருத்தனலே.**

ஒன்பது வடிவங்களில் துர்க்காதேவி பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள். சம்சாரமாகிய வனத்தை அழிப்பவள் **"வனதுர்க்கை"** சிவனுடன் திருபுரமெரிக்கச் சென்ற சூலம் ஏந்திச் சென்றவள் **"சூலினி துர்க்கை"** முருகனைத் தோற்றுவிக்க ஈசன் நெற்றிக் கண்களிலிருந்து அக்கினிப் பொறிகளை தாங்கிச் செல்லும் ஆற்றலை வாயுவுக்கும், அக்கினிக்கும் அருளியவள், **" ஜாதவேதா துர்க்கை"** ஆவாள்.

தட்சயாகத்தின் போது இறைவனின் சினத்தைச் சாந்தி செய்தவளும், நோய் முதலிய பீடைகளை அழிப்பவளும் **சாந்திதுர்க்கை** ஆவாள்.

அருச்சுனனுக்குப் பாசுபதம் அளிக்க இறைவன் வேடனாகச் சென்ற போது **வேட்டுவச்சியாக** கோலத்தில் **'சபரி துர்க்கை"** ஆகும்.

பண்டாசுரப் போரில் தனது படைகளைக் காக்கத் தானே தீப்பிழம்பில் வடிவாக இருந்தவள். **"ஜவாலாதுர்க்கை"** ஆவாள். இராமபிரான் காலத்தில் இலவணாசுரனை அழிக்க சத்துருக்கனுக்கு உதவிய **"இலவணதுர்க்கை"** ஆவாள்.அசுரர்களை மயங்கச் செய்து, தேவர்களுக்கு அமுதம் அளிக்கத் திருமாலுக்கு உதவியவள் **"ஆசுரி துர்க்கை"** ஆவாள்.குண்டலினி யோகிகளுக்கு ஞான ஒளியைக் கொடுப்பவள் **"தீப துர்க்கை"** ஆவாள்.நாம் அன்புடன் இன்று தேர் பவனி வரும்போது உலகு எங்கும் அபிராமிப்பட்டரது **"அபிராமி அந்தாதி"** ஓதுவோம் சகல வெற்றி தரும் ஜெயதுர்க்கையை பூமியிற் பிறந்த மக்கள் யாவரும் மாட்சிமைப்பட்ட பயனாகிய பேரருள் பெறுவோம்.

**சிங்கை நமச்சிவாயப் புலவர். அந்தாதியில்**

வேல் கொடுத்தாய் திருச் செந்தூருக்கு,
அம்மியின் மீது வைக்கக்
கால் கொடுத்தாய் நின் மணவாளருக்கு
கவுணியருக்குப்
பால்கொடுத்தாய், மூவர் பயப்படமது
வேளுக்குச் செங்
கோல் கொடுத்தாய் அன்னையே!
எனக்கு ஏது கொடுத்திலையே!

துர்க்கா புரந்தரியளை அன்புடன் பிரார்த் திப்போம் அவள் திருவடிகளை மனத்தில் இருத்தி, ஏத்தி, அபிராமி அந்தாதி ஓதி வழிபடுவோம். நாமும் நலம் பெறுவோம். அன்பு அம்பாள் சிவ நெறி, சைவ நெயியில் வாழ்வாங்கு வாழ்வோம்.

முன்னர் சிவநெறி, அம்பிகை நெறிகளை வழி காட்டி செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா அவர்களையும் இன்றும் அவரது அற நெறி வழியில் செஞ்சொற் செல்வன் ஆறுதிருமுருகன் ஐயா அவர்களையும் நன்றியுடன் சிந்தையில், பல நாடுகள் சென்று இலங்கைச் செந்தமிழிலும் சிவ. அற, சைவ, அம்பாள் நெறிகளையும் அருள் தமிழ் மொழிகளில் சைவசமய வழிகளை மேலும் சிறக்க ஈழத்துச் சிதம்பரனை பிரார்த் தித்து, அபிராமி அந்தாதி பாடி துர்க்காபுரத்து அபிராமி அம்மா கடைக்கண்பார்வை பேரருள் பெற்று உய்வோமாக.

அன்று ஓர் சிறு ஆலயத் தொண்டில் அம்மா சேவையில் "யோகர் சுவாமிகள்" அங்கு அருள் வாக்காக பன்னிரு திருமுறைகள் ஓதுங்கள். உலகத்தில் ஓர் திவ்விய தேச அருள்மிகு ஆலயம் ஆகும். இன்றும் சித்திரைச் சதயத்தில் ஆரம்பமாகி ஆடிச் சுவாதியில் பூரணமாவது. நாமும் பன்னிரு திருமுறைகள் ஓதுவோம்.



**க.கு.க சிவபாலன் (போசகர்)**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்**
**மாணிக்கவாசகர் மடாலயம்**

(சி-1171)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...

**என் இனிய நெஞ்சங்களே!**

எனது ஆன்மீகப் போராட்டப் பாதையிலே நான் பட்ட அனுபவங்கள்.....

ஈசுரவிநாயகருடன் போராடியதைவிட மக்களிடம் போராடியது தான் பெரிய போர் என்றே கூறுவேன். பிரசுரம் இன்று கொடுத்துவிட்டு போய்விடுவேன். நாளை என்னை எதிர்பார்த்துக் கொண்டு நிற்பார்கள். ஐயா எப்ப நடக்கும் ஐயா!ஐயா! என்று போகவிடாமல் மறித்து விடுவார்கள்.விரைவாகச் செய்யப் போகின்றார். பயப்படாமல் இருங்கோ என்று சொல்லிச் சொல்லி தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடியதும் உண்டு.

மறிக்கப் போகின்றார்களே என்று வேறு பாதையால் மறைந்து போனதுமுண்டு. அப்போது இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். அவர்கள் தான் அந்தரப்பட்டு கேட்பது. அதிகம் யாழ்ப்பாணத்தில் ஒரு மாதிரிச் சமாளித்து விட்டேன்.

யாழ். இடப்பெயர்வு... வடமராட்சி, தென்மராட்சி எங்கும் நிரம்பி ஒரே மக்கள் கூட்டம். அடியேனுக்கும் குடும்பத்துடன் தென்மராட்சி நுணாவில் மனம் கோணப் பிள்ளையார் இருக்க இடமும் தந்து கோயில் ஐயா சாப்பாடும் தந்தார். அதற்குக் குறையில்லை.போனவுடன் அந்தரத்தில் நிற்கும் மக்களை ஆற்றுப்படுத்துவதற்காக ஓர் ஆறுதற் செய்தி. பயம் வேண்டாம் பயம் வேண்டாம். விரைவாக யாழ்ப்பாணம் போகப்போகின்றோம்.

எல்லோரும் ஈசுர விநாயகரை சதா நினையுங்கள். அவர் எங்களை கைவிடமாட்டார் என்று வீடு வாசல்களை விட்டு அந்தரத்தில் நிற்கும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கட்டும் என்று ஓர் ஆறுதல் செய்தியை அவசர அவசரமாக ஈசுர விநாயகரின் குரல் என்றும் பிரசுரத்தை வெளியிட்டேன். அது மக்கள் எல்லோருக்கும் ஆறுதலைக் கொடுத்தது மட்டுமல்ல ஐயா எங்கே இருக்கின்றார் என்றும் காட்டிக்கொடுத்து விட்டது.

தென்மராட்சி மட்டுமல்ல வடமராட்சியிலிருந்தும் ஐயா இருக்கும் இடம் தேடிவரத் தொடங்கி விட்டார்கள். இடம்பெயர்ந்து அனைத்து மக்களையும் ஈசுர விநாயகர் விரைவாக மீண்டும் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வார். நம்பிக்கையுடன் இருங்கள் என்று ஆறுதல் கூறி அனுப்புவேன். சிலர் இனிமேல் யாழ்ப்பாணத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது என்றும் வாதிட்டார்கள். அவர்களுக்கு நான் கூறியது. யாழ்ப்பாண மக்களுக்கு எல்லாம் போச்சே என்று நிலைவரும் என முன்கூட்டியே ஈசுர விநாயகர் கூறியருளி விட்டார்.

அதன்படி நிகழ்ந்து விட்டது. இனிமேல் யாழ் செல்வது பற்றிய தர்சனம் கிடைத்ததும் அடியேன் அனைத்து மக்களுக்கும் அறியத் தருவேன் மீண்டும் இரண்டு முறை பிரசுரங்கள் விட்டேன். மேலும் மக்கள் படும் துன்பங்களால் தாங்க முடியாமல் எங் களுக்குத் தீர்வு வேண்டாம். வீடுகளுக்கு விட்டால் போதும் என்று அடியேனிடம் கேட்கிறார்கள்.

ஈசுர விநாயகா! நீரே பதில் சொல்லும் என்று கேட்டு 108 விடி விளக்குகளை மனம் கோணாப்பிள்ளையாருக்கு ஏற்றினேன். என்ன அதிசயம்! அடுத்த நாள் தர்சனம் யாழ் செல்வது நிச்சயம் என்று கூறியருளினார். இத் தர்சனத்தை பிரசுரம் மூலம் எல்லா மக்களுக்கும் அறிவித்திருந்தேன். அதன் பின்னர் என்னால் வெளியிலே போக முடிய வில்லை.

எப்ப போகிறது எப்ப போகிறது ஐயா என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். அதனால் மனம் கோணாப் பிள்ளையரோடு மறைந்திருந்தேன். நான் படும் வேதணை ஈசுர விநாயகருக்குத் தெரியும் தானே. பிரசுரம் விட்டு ஒரு கிழமையில் யாழ்ப்பாணம் பாதை யைத் திறந்து விட்டார். ஐப்பசி ஸ்கந்தசஷ்டி முடிந்தவுடனே இங்கிருந்து புறப்பட்டோம். மாசி சதுர்த்தி நன்னாளிலே யாழ் மண்ணில் காலடி வைத்தோம். இவையெல்லாம் எங்களைக் காப்பாற்றுவதற்காகவே என்பதை உணர் வோமாக...

**என் அன்பு உள்ளங்களே!**

ஈசுர விநாயகர் முடிவைக் காட்டாததின் அர்த்தம், அதாவது தர்சனத்தைக் காட்டியருளுவார் எப்ப நடக்கும் என்று காட்டமாட்டார். அதனால் அடியேனும் பிரசுரம் விட்ட பின்னர் உங்களைப் போல் தான் பார்த்துக் கொண்டிருப்பேன். ஐயா! எப்ப போவோம் எப்போ போவம் என்று கேட்கும் போது எனக்கே சிரிப்பு வரும்.ஐயாவுக்கே தெரியாது. எப்ப போகப் போகின்றோம் என்று இதை எப்படி மக்கள் அறிவர்.

யாழ்ப்பாணத்தில் பிரசுரம் கொடுத்து விட்டு தப்பித்து விடலாம். ஆனால் யாழ். இடப்பெயர்வின் பின் என்னால் தப்பிக்கவும் முடியவில்லை. மறைந்திருக்கவும் முடியவில்லை. ஈசுர விநாயகர் தான் அடி யேனைக் காப்பாற்றினார். "பட்டதுபோதும் பட்டி னத்தாரே" ஈசுர விநாயகரின் குரல் பிரசுரங்கள் மக்களுக்கு ஆறுதல் அளித்ததோடு வன்னி நிலப்பரப்புக்கும் போகவிடாது அவர்களையும் காப்பாற்றியுள்ளது.

இப்போதும் அதனை நினைத்து சந்தோஷப்படுவேன். ஒரு வருடம் இரண்டு வருடமாக 33 வருடங்கள் அடியேன் பட்ட அனுபவங்கள் எழுத்தில் எழுதி முடியாது. சொல்லில் சொல்ல முடியாது.அவனுக்குத் தான் தெரியும் அந்த ஆரம்பமும் அதன் முடிவும். அட யாருக்கம்மா புரியும். அவன் வேடிக்கையும் அதன் விளைவும்.

யுத்த கால மக்களிடம் சிரிப்பு என்பது அரிதாகிவிட்டது. மக்களின் கவலைகளைப் போக்க எப்படிச்சிரிக்க வைக்கலாம் என்று நானும் மனைவியும் சிந்தித்தோம். சினிமா என்றால் சிரிப்பார்கள்.

அதனால் சினிமாப் பாட்டு மூலம் தெய்வீகத்தை உணர்த்தினோம். நீங்களும் பாடல்களை மெட்டுடன் பாடுங்கள். உங்களை அறியா மலே சிரிப்பு வரும்.

நோய்களைப் போக்க மருந்துகள் உண்டு. கவலை யைப் போக்க மருந்தே இல்லை. எனவே கவலையைப் போக்க உடன் மருந்து வாருங்கள். இப் பாடல்வரிகளை மெட்டுடன் பாடுங்கள். வாய்விட்டுச் சிரித்தால் நோயும் விட்டுப்போகும்..துன்பங்கள் தாங்க முடியாது கவலையோடு இருக்கும் மக்களை சிரிக்க வைத்த அன்றைய பாடல்கள்.

**ஈசுர விநாயகர் தமிழ் மக்களுக்கு ஆறுதல் கூறுவது....**

"பிறக்கும் போதும் அழுகின்றாய்- இறக்கும் போதும் அழுகின்றாய்
ஒரு நாளேனும் கவலையில்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே"
"நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் வேறில்லை
நடந்ததையே நினைத்திருந்தால் என்றும் அமைதியில்லை"
"ஆறுமனமே ஆறு இந்த ஆண்டவன் கட்டளை ஆறு"
"இன்பத்தில் துன்பம் துன்பத்தில் இன்பம் இறைவன் கொடுத்த நியதி"

**தமிழ் மக்கள் ஈசுர விநாயகரிடம் வேண்டுவது...**

"ஆண்டவனே!உன்பாதங்களைநம்கண்ணீரால்நீராட்டினோம்
இங்கே பல உயிரை வாழ வைக்க உன்னிடம் கையேந்தினோம்"
"சோதனைமேல் சோதனை போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது இதயம்"
"இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்போம்
நினைத்து வாழ ஒன்று மறந்து வாழ ஒன்று"

**ஈசுரவிநாயகர் சந்திரிக்கா அம்மையாருக்குக் கூறுவது...**

"எங்கிருந்தாலும் வாழ்க உன் இதயம் அமைதியில் வாழ்க"
"சிலர் சிரிப்பார் சிலர் அழுவார்- நீ சிரித்துக்கொண்டே அழுகின்றாய்
காலம் ஒருநாள் மாறும் உன் கனவுகள் யாவும் தீரும்"

**சந்திரிக்கா அம்மையார் ஈசுரவிநாயகரிடம் வேண்டுவது...**

"உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல
உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல
நீ சொல்லாத சொல்லும் சொல்லல்ல- (இங்கு) நீ இல்லாமல் நானும் நானல்ல"
"நீ எங்கே என் நினைவுகள் அங்கே நீ ஒருநாள் வரும் வரைக்கும் நானிருப்பேன் பொறுமையுடன்"

**தமிழ் மக்கள் சந்திரிக்கா அம்மையாரிடம் கூறுவது...**

மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன"
"இராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு காத்தாடி போலாகுது"

**இந்தியா தனது இலங்கை நிலைப்பாட்டை சர்வ தேசத்திற்கு கூறுவது....**

யாரும்பார்த்திட்டுப்போனாலும்பாராமல்போனாலும்-நான்
பார்த்துக்கிட்டேதான் இருப்பேன் இலங்கையைப்
பார்த்துக்கிட்டே நான் இருப்பேன்"

**நாடு திரும்பியவுடன் ஜனாதிபதி அம்மையாரிடம் கேட்பது...**

"நலம் நலம் அறிய ஆவல்- உன் நலம் நலம் அறிய ஆவல்
நீ அங்கு சுகமா? நான் இங்கு சுகமே நலம் நலம் அறிய ஆவல்"

**சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதிக்கு கூறுவது...**

ராசா ராசா.. என் மன்மத ராசா- இதைக் கேட்டுக்க ராசா வள்ளி மனதைக் குழப்பாதே"
யாரை நம்பி நான் இருந்தேன் போங்கடா போங்க என்காலம் வெல்லும்! வென்றபின்னே வாங்கடா வாங்க"

**தமிழ்நாட்டு மக்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்குக் கூறுவது...**

"போனால் போகட்டும் போடா- இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா போனால் போகட்டும் போடா
வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்தமண்ணில் நமக்கு இடமேது"

**யாழ் மக்கள் வன்னி உறவுகளை அரவணைத்து ஆறுதல் கூறுவது..**

"வாழ்வே மாயம் இந்த வாழ்வே மாயம்
தாயோடு வந்தது சேயோடு போகுது மெய்யென்று மேனியை யார் சொன்னது"

**தமிழ் மக்கள் நிம்மதி தேடுகின்றனர்...**

"எங்கே நிம்மதி... எங்கே நிம்மதி...
எங்கே எமக்கோர் இடம் வேண்டும்"
ஐயா நிம்மதி கிடைக்கும் இடத்தை காட்டுகின்றார்.

ஈசுர(வி)நாயகர் கோயில் கொண்ட இடம் சுழிபுரம் பறாளாயிலே
நாம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெறவும் அமர்ந்தார் பறாளையிலே

**பிரதமர் மன்மோகன்சிங்கிடம் ஜனாதிபதி கேட்பது...**

நான் றெடி - நீங்க றெடியா
கட்டமைப்பைச் செய்வதற்கு நான் றெடி- வரும்
ஆபத்துக்கு உதவிதர நீங்க றெடியா?

**இந்தியாவிலிருந்து நாடு திரும்பி ஜனாதிபதியிடம் தமிழ் மக்கள் கேட்பது...**

ராட்சசியோ! தேவதையோ! இரண்டும் சேர்ந்த பெண்ணோ
தமிழினத்தின் பிரச்சினையை ஞாபகம் ஊட்டும் கண்ணோ
தீர்வு கேட்டவுடன் ஓடுறியே இந்தியா என்ன தடுக்குதோ?
வார்த்தையாலே அடிமையாக்கும் ராஜ ராஜ ராணியே!
ஜனாதிபதியே! எம்மை மயக்கிற பதியே...ஓ...ஓ...

**ஜே.வி.பி விலகியவுடன் ஜனாதிபதியிடம் கூறுவது...**

தந்தித்தோம்! திம்தியும் தொந்தன திந்தாதி நும்தோம்
தகதிம் தோம் திம்தியும் தொந்தன திந்தாதி நும்தோம்
ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டோம்- இனி
சேராத கூட்டத்திலே சேரப் போறோம்

**வெளியேறும் ஜே.வி.பி இடம் ஜனாதிபதி கூறுவது...**

அட யாரை நம்பி நான் இருந்தேன் போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே வாங்கடா வாங்க
வங்கியிலே பணமில்லே!... கட்டமைப்போ செய்ய வில்லே!
உண்மைநிலை புரியல்லே!... எம்மக்களுமோ நம்ப வில்லே

**ஜனாதிபதி அவர்கள் சிங்கள மக்களிடம் கூறுவது..**

ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே.... ஞாபகம் வருதே...
கண்ணைக்கோதிய காக்காப் பிள்ளையாரை ஞாபகம் வருதே
ஏதோ ஒன்றை இழந்தது! போலே (கண்ணை)
ஏதோ ஒன்று கிடைத்தது! போலே (ஆட்சி)
ஏதோ மீண்டும் செய்வது போலே (சமாதானம்)
ஏதோ ஒன்று முடிந்தது போலே (பிரச்சினை)

**ஜனாதிபதி அவர்கள் தமிழ் மக்களிடம் கூறுவது......**

(கண்ணைக் கொத்திய) கடவுள் மீது ஆணை!... உங் களைக் கைவிட மாட்டேன்
(ஸ்ரீலங்கா) நாட்டின் மீது ஆணை!.. உங்கள் பிரச்சனை தீர்ப்பேன்

**ஜனாதிபதி அவர்கள் ஈசுர விநாயகரிடம் கேட்பது..**

நீ வருவாயா! உடைந்து போன நெஞ்சை
ஒட்ட வைக்க- நீ வருவாயா
கண்ணோடு நான் பட்ட துன்பங்கள் போதும்
கையோடு நீ நின்று கட்டமைப்பைச் செய்ய
வருவாயா-நீ வருவாயா!

**ஈசுரவிநாயகர் வருவதை உணர்ந்த ஜனாதிபதி அவர்கள் மாண்புமிகு ரணிலிடம் கூறுவது....**

கும்பிடப் போன தெய்வம்... குறுக்கே வந்ததய்யா
குறுக்கே வந்ததெய்வம்... என் கூட இருக்குதய்யா
பாலை ஊற்றய்யா தயிரை ஊற்றய்யா
கட்டமைப்பு அமுல்படுத்த நீரை ஊற்றய்யா
வேண்டிக்கிட்டேன் வேண்டிக்கிட்டேன் கட்டமைப்புச் சிறப்புறவே

**ஈசுரவிநாயகரின் திருவிளையாடல்களை உணர்ந்த மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியிடம் கூறுவது...**

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை! என்னைச் சொல்லிக் குற்றமில்லை!
கண்ணைக் கொத்தி காக்காப் பிள்ளை கடவுள் செய்த குற்றமெல்லோ

**ஜனாதிபதி அவர்களின் மனச்சாட்சி கூறுகின்றது.**

ஒவ்வொரு நாடுகளும் சொல்கிறதே
சமாதானம் விரைவாகச் செய்யும்படி
நம்பிக்கை என்பது வேண்டும் எம்மக்களுக்கு
என் இலட்சியம் நிச்சயம் வெல்லும்- ஒரு நாளில்
இனமே! எம் இனமே! என்னைச் செய்யவிடு

அவர் திருப்பாதம் போற்றி! போற்றி!! போற்றி!!!

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும்)**

(சி-1713) (1919)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 580





மதுராந்தகர் தம் பீடத்தில் அமர்ந்ததும் மற்றவர்களும் அவரவர்களுடைய இடத்தில் உட்கார்ந்தார்கள். செம்பியன் மாதேவி மதுராந்தகரைப் பார்த்து, "குமாரா! இந்த இளம்நம்பி திருநாரையூரைச் சேர்ந்தவர். அவ்வூரிலுள்ள பொல்லாப் பிள்ளையாரின் பூரண அருளைப் பெற்றவர். இதுவரையில் யாருக்கும் கிடைக்காத தேவாரப் பதிகங்கள் சில இவருக்குக் கிடைத்திருக்கின்றன.

முன்னொரு காலத்தில் நமது சோழ குலத் தில் உதித்த மங்கையர்க்க ரசியர் பாண்டிமா நாட்டின் மகாராணியாக விளங்கினார். அவருடைய அழைப்புக்கிணங்கி ஆளுடைய பிள்ளையார் ஞானசம்பந்தர் மதுரைமாநகருக்குச் சென்றார். அங்கே சமணர்களை வாதப் போரில் வென்றார். அச்சமயம் மதுரைமாநகரில் சம்பந்த சுவாமி பாடிய பதிகங்கள் சில இவருக்குக் கிடைத்திருக்கின்றன.

அந்தப் பதிகங் களில் நமது சோழகுலத்து மாதரசியைப் பற்றியும் சம்பந்தர் பாடியிருக்கிறார். அந்தப் பாடல்களைக் கேட்கும் போது எனக்கு உடல் பூரித்துப் பரவசமாகிறது. உன் தந்தை இருந்து கேட்டிருந்தால் எவ்வளவோ மகிழ்ச்சியடைந்திருப்பார் நீயாவது கேள்!" என்று சொன்னார்.

மதுராந்தகர், "கேட்கிறேன், தாயே! பதிகத்தை ஆரம்பிக்கட்டும்" என்றார். ஆனால் அவருடைய முகம் அவ்வளவாக மலர்ந்திருக்கவில்லை. அவருடைய உள்ளம் வேறு எங்கேயோ இருந்தது. திருநீறு, ருத்ராட்சம் அணிந்த சாதாரணச் சிறுவன் ஒருவனைப் பெரியதொரு பீடத்தில் நடுநாயகமாக அமர்த்தித் தடபுடல் செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. அன்னையைத் திருப்தி செய்வதற்காகப் பொறுமையுடன் உட்கார்ந்திருந்தார்.

பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி தம் கையிலிருந்த ஓலைச் சுவடியிருந்து படிக்கத் தொடங்கினார்.

ஞானசம்பந்தர் மதுரை மாநகரைப் பார்த்ததும், "சிவ பக்திச் செல்வத்திற் சிறந்த மங்கையர்க்கரசியார் வாழும் பதி அல்லவா இது?" என்று வியந்து பாடிய பதிகங்களை முதலில் அவர் பாடினார்.

"மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை<br>
வரிவளைக் கைம்மடமானிப்<br>
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி<br>
பணிசெய்து நாடொரும் பரவப்<br>
பொங்கழலுருவன் பூத நாயகனால்<br>
வேதமும் பொருள்களும் அருளி<br>
அங்கயர்க்கண்ணி தன்னொடும்<br>
அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே!

மண்ணெலாம் நிகழ மன்னனால் மன்னும்<br>
மணிமுடிச் சோழன்றன் மகளாம்<br>
பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி<br>
பாங்கினாற் பணி செய்து பரவ<br>
விண்ணுளோர் இருவர் கீழொடுமேலும்<br>
அளப்பரிதாம் வகை நின்ற<br>
அண்ணலார் உமையோடு இன்புறுகின்ற

ஆலவாயாவதும் இதுவே!

என்னும் பாடல்களைக் கேட்டபோது செம்பியன் மாதேவியின் கண்களிலிருந்து முத்து முத்தாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

அத்தகைய மங்கையர்க்கரசியைப் பெற்ற குலத்தில் தாமும் வாழ்க்கைப்பட்டு, மகாராணியாக வாழ்ந்திருக்கக் கொடுத்து வைத்திருந்த பூர்வ ஜன்ம பாக்கியத்தை எண்ணி எண்ணி மனம் பூரித்து மகிழ்ந்தார்.

மதுராந்தகருக்கோ மேற் கூறிய பாடல்களில் 'மண்ணெலாம் நிகழ மன்னனால் மன்னும் மணி முடிச் சோழன்' என்னும் வரி மட்டுமே மனத்தில் பதிந்தது.

அத்தகைய புராதனப் பெருமை வாய்ந்த சோழர் குலத்து மணி மகுடம் தன் சிரசை அலங்கரிக்க வேண்டியதிருக்க, இன்னொருவர் அதை அபகரித்துக் கொண்டிருப்பதை நினைத்த போது அவருக்கு ஆத்திரம் உண்டாயிற்று. சம்பந்தர் மங்கையர்க்கரசியாரைப் போய்ப் பார்க்கிறார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## உழைப்பினாலா? கருணையினாலா?

ஒரு மளிகை வியாபாரியிடம் முஸ்லிம் இளைஞரும், கிறிஸ்தவ இளைஞரும் பணி புரிந்து வந்தனர். வியாபாரி ஒரு நாள் பணப்பையை வீட்டுக்கு எடுத்துப் போக மறந்து கடையிலேயே வைத்து விட்டு, மறதியாகச் சென்று விட்டார்.

இரண்டு நாள் கழித்து கடைக்கு வந்த போது பணப்பை வைத்த இடத்திலேயே இருந்ததைக் கண்டார். பணமும் பையில் வைத்த படியே இருந்தது.

இரண்டு வேலையாட்களுமே யோக்கிய மானவர்கள் என்று மகிழ்ச்சி அடைந்தார் வியாபாரி.

ஒருநாள் இரண்டு வேலையாட்களையும் கூப்பிட்டு, "நீங்கள் இருவரும் எதனால் வாழ்கிறீர்கள்?" என்று கேட்டார். "உழைப்பால் வாழ்கிறேன்" என்றான் முஸ்லிம் இளைஞன். "தங்கள் கருணையால் வாழ்கிறேன்" என்றான் கிறிஸ்தவ இளைஞன்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு பரங்கிக் காயை கிறிஸ்துவ இளைஞனுக்கும், மூன்று ரூபாயை முஸ்லீம் இளைஞனுக்கும் கொடுத்தார் வியாபாரி.

இருவரும் வீட்டுக்குச் செல்லும் போது, "பரங்கிக்காய் என் கொல்லையில் இருக்கிறது. இதை நீ எடுத்துக் கொள்கிறாயா?" என்று கேட்டான் கிறிஸ்தவ இளைஞன்.

சரி என்று கூறி, அவனிடமிருந்து பரங்கிக் காயை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக, மூன்று ரூபாயைக் கொடுத்தான் முஸ்லீம் இளைஞன். வீட்டுக்குச் சென்று, பரங்கிக்காயைக் கீறினான். அதில் ஒரு தங்க மோதிரம் இருப்பதைக் கண்டான்.

அந்த மோதிரத்தைக் கொண்டு போய் வியாபாரியான முதலாளியிடம் கொடுத்து, தாங்கள் இருவரும் இரவு போகும் போது, மாற்றிக் கொண்ட விவரத்தைக் கூறினான் முஸ்லீம் இளைஞன். வியாபாரி, "நீ உழைப்பினால் தான் வாழ்கிறாய்!" என்று அவனைப் பாராட்டியதோடு அந்த மோதிரத்தை நீயே என்னுடைய பரிசாக வைத்துக் கொள்" என்று கூறினார்.

அவர்கள் இருவரும் என்ன செய்கிறார்கள் என்பதை சோதிக்கவே, பரங்கிக்காயினுள் மோதிரத்தை வைத்திருந்தார் முதலாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானது எதுவென தேர்ந்தெடுக்கத் தெரிந்துவிட்டால் தேவையற்றதும், பரபரப்பும் தானாகவே விலகி விடும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகிந்த தரப்பின் அரசியல் இனவாதமாகவே இருக்கும்

குருசேத்திரப் போரில் துரியோதனன் தொடை பிளந்து கிடக்கின்றான். கௌரவர் சேனை கூண்டோடு மாண்டு போயிற்று. அவனது இனபந்துக்கள் அவனை வெறுக்கலாயின.

இதற்குக் காரணம் அவனிடம் இருந்த ஆணவச் செருக்கும் அகந்தையும் என்பது புரிதற்குரியது.

ஆம், ஐந்தூர் அன்றி ஐந்து வீடேனும் தருக என்று பாண்டவர்கள் கேட்டபோது, அதை ஏளனமாக நினைத்தவன் துரியோதனன்.

பாண்டவர்களின் நல்ல குணத்தைப் பலயீனமாகத் துரியோதனன் நினைத்ததன் காரணமாகவே அவனும் அவனால் அவன் பரிவாரங்களும் அழியலாயின.

ஆக, கௌரவர் தரப்பு எப்போதும் அழிவையே சிந்திக்கும். அகந்தை கொண்டுமாளும்.

தாமும் அழிந்து மற்றவர்களுக்கும் அழிவை ஏற்படுத்தும். இதற்குப் பல உதாரணங்களைக் கூறமுடியும்.

ஆம், 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷவை சிங்கள மக்கள் ஓட ஓடத் துரத்தினர். இஃது உலகமறிந்த சம்பவம்.

விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்து இலங்கை நாட்டைக் காப்பாற்றினோம் என்று கர்ச்சித்த ராஜபக்ஷ தரப்புக்கு, சிங்கள மக்கள் வழங்கிய தீர்ப்பு என்ன? என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஆம், இந்த நாட்டைச் சூறையாடி பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் வீழ்த்திய ராஜபக்ஷ தரப்பு இன்னமும் தங்களைப் புடம் போடவில்லை.

மாறாக, தமக்கு ஏற்பட்ட இழுக்கை – இந்த நாட்டு மக்கள் தமக்கு வழங்கிய தண்டனையை நிவர்த்திப்பதற்காக அவர்கள் செய்ய வேண்டிய கழுவாய் வேறாக இருக்க, அழிவுச்சிந்தனை கொண்ட அவர்கள் மீண்டும் இனவாதத் தீயை மூட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

உண்மை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ; இனவாதத்தை தனது தேர்தல் பிரசாரமாகத் தூக்கியுள்ளார்.

எங்கெல்லாம் அவர் தேர்தல் பிரசாரம் செய்கின்றாரோ அங்கெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தைத் தூண்டிவிடுகிறார்.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்த மாட்டேன் என்று கூறிவரும் நாமல் ராஜபக்ஷ தனிநாடு கிடைக்கும் என்று தமிழ் மக்கள் கனவு காணக்கூடாது என்றும் கொக்கரித்துள்ளார்.

ஆக, நாடு கந்தறுந்திருக்கின்ற இந்த வேளையில்கூட, நாட்டின் பொருளாதாரம் பற்றிச் சிந்திக்காமல் – நாட்டு மக்களின் வறுமையை ஒழிப்பது பற்றிக் கதைக்காமல் தமிழ் மக்களுக்கு எதிராகக் கதைப்பதன் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறவும் சிங்கள மக்கள் தங்களை ஓட ஓடத் துரத்திய சம்பவத்தை மறைக்கவும் முற்படும் ராஜபக்ஷ தரப்புகளின் அரசியல் என்பது எப்போதும் இனவாதமாகவே இருக்கப் போகிறது.

# தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளம் தமிழ்ப்பொது வேட்பாளர்

### வடக்கு, கிழக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான துறவியர் ஒன்றியம் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

தமிழ்ப்பொது வேட்பாளர் ஈழத் தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளம் என வடக்கு, கிழக்கு நீதிக்கும் சமாதானத்துக்குமான குழுக்கள் துறவியர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில்குறித்த ஒன்றியம் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில்,

மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு நாடு தயாராகிக்கொண்டு இருக்கின்றது. இந்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அல்லது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் பற்றிய அரசியல் அறிவு, அவர்களது தனி - கூட்டு அரசியல் இறந்தகால வரலாற்றுடன்தான் எமக்கு முன்னுள்ள தெரிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது எவ்வளவு நம்பிக்கை தருவதாக இருக்கிறது என்பதை அடிக்கோடிட்டு காட்ட வேண்டிய தேவையில்லை. இந்த ஜனாதிபதித் தேர்தலும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் உள்ள சட்டத்திற்குள் இருந்தே நடாத்தப்படுகின்றது என்ற உண்மையைக் கூறாமல் இருக்க முடியாது.

தற்போதுள்ள ஜனநாயக முறைமை எண்களைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது என்ற உண்மை பொது அறிவுக்குட்பட்டது. வாக்குகளின் எண்ணிக்கையை மையப்படுத்திய ஜனாதிபதி ஜனநாயக தெரிவில் ஈழத்தமிழ் மக்களுடையதும் ஏனைய சிறுபான்மை இனக்குழுக்களினதும் வாக்குகள் செல்வாக்கு செலுத்துவது வரையறுக்கப்பட்டுள்ளது. தெற்கிலிருந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிங்கள பௌத்த தேசியத்தின் மேலாண்மையை வலியுறுத்தியே பிரச்சார மேடைகளை அலங்கரிக்கின்றார்கள். ஈழத்தமிழ் மக்களுடைய கூட்டு அரசியல் வேணவாவையும் தமிழின அழிப்பையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அரசியல் கோட்பாட்டுச் சூழலில் தெற்கில் இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒன்றுபட்டிருக்கின்றார்கள். அதே நேரத்தில் தமிழின அழிப்பில் நீதி கோருவதை மறுப்பதோடல்லாமல் ஸ்ரீலங்காவின் படைக்கட்டுமானம் சிங்கள தேச விடுதலைக் கட்டுமானத்தில் ஆற்றிய பங்களிப்பை கதாநாயக சொல்லாடலுக்கூடாகவே கட்டமைக்கின்றார்கள்.

தமிழர் தாயகம் தொடர்ந்து ஈழத் தமிழ்த் தேசிய நீக்கத்துக்குள் வலிந்து தள்ளப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இது வெவ்வேறு வடிவங்களை /பரிமாணங்களை கொண்டுள்ளது. உதாரணமாக, ஈழத்தமிழர் ஒருங்கிணைந்த தாயகத்தை துண்டாடல், தமிழர் தாயகத்தில் இராணுவ மயமாக்கச் செறிவை அதிகரித்தல், ஈழத்தமிழர் தாயகம் தொடர்ந்தும் அடக்குமுறைக்கு உட்பட்ட தேசமாகவே உள்ளது. ஈழத்தமிழர் நிலங்கள் வலிந்து பறிக்கப்படுகின்றன. சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. ஒட்டு மொத்தத்தில் ஈழத் தமிழர் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறான அரசியல் சூழமைவில் அரசியல் அறத் தெரிவாக தமிழ்ப் பொது வேட்பாளர் ஈழத் தமிழ் மக்களின் ஒற்றுமையின் அடையாளமாக நமக்குமுன் நிறுத்தப்பட்டுள்ளார். இம் முக்கியமான காலகட்டத்தில் தமிழ் மக்களின் தெரிவு, ஈழத்தமிழரின் அரசியல் வேணவாவை வலுப்படுத்தும் என்பது எமது ஆழமான நம்பிக்கை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# அநுர ஆட்சிக்கு வந்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடும்

## பிரதமர் தினேஸ் குணவர்தன

அநுர குமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்தால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என பிரதமர் தினேஸ் குணவர்தன எச்சரித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொலையாளி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகவாதி. இருவரில் எவர் வேண்டும் என்பதை எதிர்வரும் 21ஆம் திகதி நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

கெஸ்பேவவில் ரணிலால் முடியும் வெற்றிப் பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் ஆதரவைக் கோரியுள்ளார்.

மக்களும் பெருமளவில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றார்கள்.

பாராளுமன்றத்தில் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளினதும் மக்களினதும் நம்பிக்கையை ஜனாதிபதி உறுதி செய்திருக்கின்றார்.

இதுவரையில் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே முன்மொழிந்திருக்கின்றார். நாட்டின் கல்வித்துறைக்கும் கல்வியியல்கல்லூரி போன்ற விடயங்களை அவர் அறிமுகப்படுத்தினார்.

இவ்வாறு இலங்கையில் புதுமையான முயற்சிகளை சாத்தியமாக்கிக் கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால்மாத்திரமே முடியும்.

தவறியேனும் இந்த நாட்டில் மக்கள் விடுதலை முன்னணி ஆட்சிக்கு வந்தால் மூன்று எம்.பிக்களை வைத்துக் கொண்டுஜனநாயக ஆட்சி செய்யும் இயலுமை அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இல்லை.

எனவே, அவர் தன்னிச்சையான அதிகாரங்களுடன் செயற்பட முயற்சிப்பார். ஆகவே, நாட்டில் ஆட்சி அதிகாரத்தைச் செயற்படுத்தக்கூடிய பாராளுமன்ற அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது.

இம்முறை பெருமளவான புதிய வாக்காளர்கள் பதிவாகியிருக்கும் நிலையில் நாட்டின் எதிர்காலத்தைச் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார். (ம-7)

# திருகோணமலை மாவட்ட நீதிபதி பதவி நீக்கம்

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உடன் அமுலுக்கு வரும் வகையில், நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பதவி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

புல்மோட்டை பகுதியில் கடந்த 04ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பிலான விசாரணைகளின் அடிப்படையிலையே நீதிச் சேவை ஆணைக்குழுவினால் திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் பதவி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# வ.ஜ.ச ஜெயபாலன் சிறப்பிதழ் வெளியீடு


*(யாழ்ப்பாணம்)*

இலக்கிய வெளியின் 6ஆவது அரையாண்டு இதழாகிய “வ.ஐ.ச ஜெயபாலன்” சிறப்பிதழ் நூலின் வெளியீட்டு நிகழ்வானது இன்று 14.09 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகம் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் இதழ் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா ஆற்றவுள்ளார் கவிஞர் கருணாகரன், எழுத்தாளர் சி. விமலன், கலாசார உத்தியோகத்தர் அ. சிவஞானசீலன், விரிவுரையாளர் சு. கபிலன் ஆகியோரும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்



## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

12

இவ்விடயங்களுக்குத் தேவையான நிதியை அந்தந்த அரசுகள் வரி அறவீடு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் சுவிட்சர்லாந்து முறையில் காணப்படும் விசேட பண்பாகும்.

சுவிட்சர்லாந்தில் ஒவ்வொரு அலகிடமும் காணப்படும் அதிகாரங்களைப் பின்வருமாறு அறிந்து கொள்ள முடியும்.

அடுத்ததாக பெல்ஜியத்தின் அரசியல் முறை பற்றி பார்போம்.

**பெல்ஜியத்தின் சமஷ்டி அரசியல் அமைப்பு**

பெல்ஜியம்

பெல்ஜியமானது (அன்றைய அதிகாரபூர்வமாக பெல்ஜிய பேரரசு) பிரான்ஸ், ஜேர்மனி, லக்சம்பர்க் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் தனது எல்லைகளை பகிர்ந்துகொள்கிறது. இதன் மொத்த பரப்பளவு 30.528 சதுர கிலோ மீற்றர் ஆகும் அதன் விஸ்தீரணம் ஏறக்குறைய இலங்கையின் அரைப் பங்கு ஆகும். இந்நாட்டில் 3 வேறுபட்ட நில அமைப்புகளை கொண்டுள்ளது. தென்கிழக்கில் ஆர்டென்னேஸ் உயர் நிலப்பகுதிகள், வடமேற்கு கடற்கரை சமவெளி மற்றும் ஆங்கிலோ-பெல்ஜிய தாழ்நிலப் பகுதியின் மத்தியில் அமைந்துள்ள பீடபூமி ஆகியவை ஆகும். பெல்ஜியம் 1830 இல் சுதந்திரமடைந்தது. 1970 மற்றும் 1993 இற்கு இடையில், நாடு ஒரு கூட்டாட்சி கட்டமைப்பாக உருவானது. இது ஆறு அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம் நிகழ்ந்தது (1970, 1980, 1988-89, 1993, 2001 மற்றும் 2012-2014 இல்). இதன் விளைவாக, பெல்ஜிய அரசியலமைப்பின் முதல் உறுப்புரை கூறுகிறது: "பெல்ஜியம் ஒரு கூட்டாட்சி அரசு, சமூகங்கள் மற்றும் பிராந்தியங்களால் ஆனது".

**பெல்ஜியம் பற்றி மேலும் சில வரிகள்.....**

- பெல்ஜியம் அல்லது பெல்கியம் என்ற பெயர் காலியா பெல்கிகா என்ற பெயரிலிருந்து பெறப்பட்டதாகும். காலியா பெல்கிகா என்பது காவுலுக்கு பகுதிக்கு வடக்கு பகுதியில் ஒரு ரோமானிய மாகாணமாகும்.
- கிமு 100 இல் ரோமானிய படையெடுப்பிற்கு முன்பு, செல்டிக் மற்றும் ஜேர்மானியர்களின் கலவையான "பெல்கே" இன மக்கள் வசித்து வந்த இடமாக இருந்தது.
- 5 ஆவது நூற்றாண்டில் மெரோவிஞ்சியன் அரசர்களின் ஆட்சியின் போது ஜேர்மானிய ஃப்ரான்கிஷ் பழங்குடியினர் இப்பகுதியில் குடியேறினர்.
- 8 ஆம் நூற்றாண்டில் அதிகார மாற்றம் காரணமாக கரோலிஞ்சியன் பேரரசிலிருந்து பிராங்க்ஸ் பேரரசு இப்பகுதியில் உருவானது.
- 843 இல் வெர்டன் உடன்படிக்கை மூலம் இப்பகுதிகள் பிரிக்கப்பட்டு மத்திய மற்றும் மேற்கு பிரான்சிகா ஆகிய இரு நாடுகளாக உருவாக்கப்பட்டது.
- 1540 இல் நெதர்லாந்து பேரரசர் ஐந்தாம் சார்லஸின் ஆட்சியின் கீழ் இப்பகுதிகள் கொண்டுவரப்பட்டன.
- 1568 இலிருந்து 1648 வரை நடந்த எண்பது ஆண்டு போரின் முடிவில் வடக்கு, தெற்கு பகுதிகள் இரு மாகாணங்களாகப் பிரிந்து ஸ்பானிய மற்றும் ஆஸ்திரிய ஹப்ஸ்பர்க்ஸ் நாடுகளால் கைபற்றப்பட்டது. இதுவே 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளின் போது நடந்த பிரெஞ்சு-ஸ்பாணிய மற்றும் பிரெஞ்சு-ஆஸ்திரிய போர்களுக்கான முக்கிய காரணமாக அமைந்தது.
- 1815 ஆம் ஆண்டு நெப்போலியனின் தோல்விக்கு பிறகு பிரஞ்சு பேரரசு கலைக்கப்பட்ட பின் ஐக்கிய நெதர்லாந்து ராஜ்யத்தின் ஒரு பகுதியானது.
- 1830 இல் பெல்ஜிய புரட்சி மூலம் நெதர்லாந்திலிருந்து சுதந்திரம் பெற்று ஒரு இடைக்கால அரசின் கீழ் ஒரு கத்தோலிக்க மற்றும் முதலாளித்துவ நடுநிலை பெல்ஜியம் உருவாக்கப்பட்டது.
- 1893 இல் ஆண்களுக்கும், 1949 ஆம் ஆண்டு பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1914 மற்றும் 1940 இல் ஜேர்மனி பெல்ஜியத்தை ஆக்கிரமித்தது அதன் கட்டுப்பாட்டில் 1944 வரை இருந்தது. அது கூட்டுப்படைகளின் வெற்றிக்கு பின் பழைய நிலையை அடைந்தது. பெல்ஜியம் ஐரோப்பிய ஒன்றியத் தின் நிறுவன உறுப்பினர் ஆகும். இதன் தலைநகரான பிரஸ்ஸல்ஸ், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகமாக மட்டுமன்றி, நேட்டோ போன்ற பல முக்கிய சர்வதேச அமைப்புக்களின் தலைமையகமாகவும் உள்ளது. பெல்ஜியத்தின் பரப்பளவு 30,528 சதுர கிலோமீற்றர் (11,787 சதுர மைல்) மற்றும் இதன் மக்கள்தொகை 11 மில்லியன் ஆகும்.

**பெல்ஜியத்தின் அலுவல் மொழிகள்.**

ஜேர்மானிய மற்றும் இலத்தின்-ஐரோப்பிய கலாசார எல்லைகளுக்கு இடையே விரிந்திருக்கும் பெல்ஜியத்தில், பெரும்பான்மையாக டச்சு மொழி பேசும் ஃபிளம்மியர்கள் 60 சதவீதமும், பிரெஞ்சு மொழி பேசும் வலோனியர்கள் 40 சதவீதமும் இருந்தாலும், மிகச்சிறிய அளவில் ஜேர்மன் மொழியும் பேசப்பட்டு வருகிறது. எனவே தான், பெல்ஜியத்தில் டச்சு, பிரெஞ்சு மற்றும் ஜேர்மன் ஆகிய மொழிகள் அலுவல் மொழிகளாக உள்ளன.

டச்சு மொழி பேசும் ஃபிளம்மியர்கள் வசிக்கும் வடக்கு பிராந்தியம் ஃப்ளாண்டர்ஸ் என்றும் பிரெஞ்சு மொழி பேசும் வலோனியர்கள் வசிக்கும் தெற்கு பிராந்தியம் வலோனியா என்றும் அழைக்கப்படுகிறது. ஜேர்மானிய மொழி பேசும் சமூகம் கிழக்கு வலோனிய பகுதியில் வசித்து வருகின்றனர்.

பிரஸ்ஸல்ஸ்-தலை நகர பகுதியானது, ஃபிளம்மிய எல்லைக்குட்பட்ட பகுதியாக இருந்தாலும், இங்கு பெரும்பாலானோர் பிரெஞ்சு மொழியே பேசுகின்றனர். எனவே, டச்சு மற்றும் பிரெஞ்சு ஆகிய இரண்டு மொழிகளுமே அதிகார மொழிகளாக உள்ளன.

1940களிலும் 1950களிலும் டச்சு, பிரஞ்சு மொழியினருக்கிடையே ஏற்பட்ட அரசியல் முறுகல் நிலை காரணமாக அடுத்தடுத்துப் பல அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதிகாரப் பரவலாக்கல் பற்றிய முதல் முயற்சி 1970களில் தொடங்கியது. 1980 இல் மொழிப்பிரிவு அடிப்படையிலும் பிராந்திய அடிப்படையிலும் அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட்டது.

1988 இல் செய்யப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பெல்ஜியம் சமஷ்டி இயல்பை பெறக் காரணமாயிற்று. இறுதியில் 1993 இல் இயற்றப்பட்ட சட்டத்தின் படி இன்றைய சமஷ்டி அரசியல் கட்டமைப்பு உருவம்பெற்றது.

**பெல்ஜியம் சமஷ்டியின் முக்கிய இயல்பு**

பெல்ஜியம் சமஷ்டியின் முக்கிய இயல்பு அது பிரதேசங்கள் (Territories) சமுதாயங்கள் (Communities) என்ற இருவகை சமஷ்டி முறைத் தீர்வுகளின் கலப்பைக் கொண்டிருப்பதாகும். பெல்ஜியத்தில் டச்சு, பிரஞ்சு மொழியினர் வெவ்வேறு புவியியல் பிரதேசங்களில் செறிந்து வாழ்ந்து வருவதால் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி பொருத்தமாயிற்று.

அத்தோடு பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸ்ஸல்ஸ் இரு மொழியினரும் கலந்து வாழும் பகுதியாதலால் அங்கு பிரதேச அடிப்படையல்லாத சமஷ்டி (Non Territorial Federalism) மிகப் பொருத்தமான தாயிற்று. இதனால் இரண்டு முறைகளும் கலப்புற்ற வடிவம் அங்கு உள்ளது.

**புவியியல் பிரதேசங்கள் (Territories)**

பெல்ஜியம் மூன்று புவியியல் பிரதேசங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவை பிரதேசங்கள் (Territories) என்ற அலகுகளாகும். வலூன், பிளாண்டர்ஸ் (Flanders) மற்றும் பிரஸ்ஸல்ஸ் (Brussels) என்பன இந்த மூன்றும் பிரதேச அலகுகளாகும். (உறுப்புரை 3)

இந்தப் பிரதேச அலகுகளை மேவியதாக பிளமிஷ் (Flemish) பிரஞ்சு, ஜேர்மன் மொழி அலகுகள் உள்ளன.

**மொழிப் பிராந்தியங்கள்**

அரசியல் யாப்பின் உறுப்புரை மொழிப் பிராந்தியங்களாக பின்வரும் நான்கை குறிப்பிடுகின்றது. (உறுப்புரை 4)

1. பிரஞ்சு மொழி பேசுவோர் பிராந்தியம்
2. டச்சு மொழி பேசுவோர் பிராந்தியம்
3. ஜேர்மன் மொழி பேசுவோர் பிராந்தியம்
4. பிரஸ்ஸல்ஸ் என்னும் இருமொழியிப் பிராந்தியம்

அதாவது புவியியல் பிரதேசம் என்ற இடப்பிரதேச நியாயாதிக்கம் (Territorial Jurisdiction) மற்றும் இடப்பிரதேசம் சாராத நியாயாதிக்கம் (Non – Territorial Jurisdiction) என்ற இருவகை நியாயாதிக்கங்கள் உள்ளன.

ராஜ்யத்தின் ஒவ்வொரு நகராட்சியும் இந்த மொழியியல் பிராந்தியங்களில் ஒன்றின் பகுதியாகும்.

இரண்டாவது வகை இடப்பிரதேச நியாயாதிக்கம் சமுதாயங்கள் சார்ந்து உருவானது. இது அச்சமுதாயங்களின் ஆளுமையின் அடிப்படையிலான (Personality Based) வகையாகும்.

பெல்ஜியத்தில் சட்டவாக்க அதிகாரமும் மூன்று வகையானது. அவை ஒரே சமயத்தில் செயற்படும் தன்மையுடையவை.

1. தேசிய மட்டத்தில் பாராளுமன்றம் சட்டவாக்க அதிகாரம் கொண்டதாய் உள்ளது. (அரசன் இதன் தலைவராக உள்ளார்).

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணையில்...

சந்தியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவேளை மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி, எதிரே வந்த ஜே.சி.பி வாகனத்தினுள் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## ஜனாதிபதி...

பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

வட மாகாண தொழில் வல்லுநர்கள், வர்த்தகர்கள் மற்றும் இளைஞர்கள் பங்குபற்றும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி யாழ். விஜயம் செய்யவுள்ளார். (ம-7,33)

## வடக்கில்...

துறை மற்றும் கிளிநொச்சி பரந்தன் ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் நேற்றுப் பெயரிடப்பட்டன.

இந் நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம, முதலீட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இரண்டு ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-7,33)

## புதிய ஜனாதிபதி...

இருப்பதாகவும் சீனா உறுதிப்படுத்தியுள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தின் ஆலோசகர் ஸூயாங்வே கருத்து வெளியிடுகையில்,

"எந்த நாட்டின் இறையாண்மையிலும் ஒருமைப்பாட்டிலும் நாங்கள் தலையிடமாட்டோம். இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் யார் ஆட்சிக்கு வந்தாலும், புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது" என்று ஸூயாங்வே கூறினார்.

இதேவேளை, இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட சீனத் தூதுவர் கீ சென்ஹொங், ஒரே சீனக் கொள்கைக்கு இலங்கையின் நீண்ட கால ஆதரவைப் பாராட்டினார்.

"ஒரே சீனக் கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பது எப்போதும் பாராட்டுக்குரியது. இது உண்மையான நட்பின் உணர்வைப் பிரதிபலிக்கிறது.

நட்பு நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் சீனா உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

அதேபோன்று சீனாவின் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த சில முயற்சிகள் உள்ளன, ஆனால் அத்தகைய நோக்கங்களை நாங்கள் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள மாட்டோம்" என்றும் கூறினார். (ம-7)

## பெப்ரவரி...

படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தனது எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவில் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

அந்நியச் செலாவணி கையிருப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் ரூபாயின் பெறுமதி வலுவடைந்து வருகின்றமை போன்ற காரணங்களால் இவ்வாறு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்குள் அனைத்து வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளையும் நீக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரின் எக்ஸ் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## அரியநேத்திர...

பிரதிப் பொலிஸ்மா அதிபரால் அச்சுறுத்தலாக்கப்படும் விடயங்களைச் சுட்டிக்காட்டி ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளும்போதும் பிரமுகர்களைச் சந்திக்கும் போதும், வாகனங்களில் செல்லும் போதும், புகைப்படம் எடுக்கும்போதும் எவ்வாறு அச்சுறுத்தல் உண்டு என சுட்டிக்காட்டப்பட்டது. (ம-7)

# தென்பகுதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கட்சிகள்

## அரியநேத்திரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவாகச் சில தமிழ்த் தேசியக் கட்சிகள் செயற்படுவதாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எட்டு மாவட்டங்களிலும் எமது பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எதிர்பார்த்த வாக்குகளைவிட அதிக வாக்குகள் எமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு வந்துள்ளது.

மக்களிடம் நாம் சங்கு சின்னத்திற்கு மாத்திரம் வாக்களிக்க வேண்டும் என்றே கோரி வருகிறோம். ஆனால் சிலர் சங்கு சின்னத்துக்கு வாக்களித்த பின்னர் விரும்பிய மற்றைய வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு சிலர் கூறுகின்றனர். இது எனதோ, பொதுக் கட்டமைப்பைச் சார்ந்தவர்களுடைய கருத்தோ இல்லை.

தற்போதைய நிலைவரப்படி எவருமே 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் வடக்குக் கிழக்கில் முகாமிட்டுப் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

நல்லூர்த் திருவிழாவிற்குக் காப்புக் கடை போடுவது போன்று, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இனிப்புக் கடை போடுவது போன்று, வடக்குக் கிழக்கில் வந்து தங்கிப் பிரசாரம் செய்கின்றனர்.

அவர்களுக்கு முகவர்களாக சில தமிழர்கள் செயற்படுகின்றனர். எமது இனத்திற்காக அவர்கள் சிந்தித்து சங்குச் சின்னத்திற்கு ஆதரவு வழங்க முன் வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-7,33)

## தங்கத் தூளுடன் நபர் ஒருவர் கைது!

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு கிலோவுக்கும் அதிகமான தங்கத் தூளுடன் நபர் ஒருவரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

டுபாயில் இருந்து இந்தியா ஊடாக வந்த குறித்த சந்தேக நபரிடம் இருந்து 1 கிலோ 860 கிராம் தங்கத் தூளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பைச் சேர்ந்த 37 வயதுடையவர் என விசாரணைகளின்போது தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.13
சீட்டிழுப்பு இலக்கம் 5595
A 9 1 6 3 0 2
அத சம்பத A 6 3 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 170
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1625
Y 15 16 32 78 Y
Double Chance 51764

மெகா பவர்
திகதி 13/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1943
I 21 41 46 49 63
10054

லக்கி 7 VIP
திகதி 2024.09.13
சீட்டிழுப்பு இலக்கம் 421
H 4 2 6 3 7 2 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3837
சீட்டிழுப்பு திகதி 13.09.2024
C 06 22 27 75
C 47903

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.13
சீட்டிழுப்பு இலக்கம் 904
கும்பம் 16 39 46 57 கும்பம்
83063 16

உத்தியோகபூர்வ முடிவுகள்
13.09.2024 வெற்றி வாரம் 303
L 7 3 8 6 6 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,979,072.00
45860
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2569 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 13.09.2024 தினம் வெள்ளி
44 50 60 64 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,574,033.60
DLB

சனிதா
திகதி 2024.09.13 வெற்றி வாரம் 4730 வர்ணம் செம்மஞ்சள்
24 50 69 71 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,888,864.00
79549
DLB

சசிரி SASIRI
வெற்றி வாரம் 528
சீட்டிழுப்பு திகதி 2024.09.13
பச்சை
வெற்றி இலக்கங்கள் 09 26 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,988,960/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4281 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.13 தினம் வெள்ளிக்கிழமை
05 29 38 49 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,225,630.80
125858
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 13 04 27 40 61
1745
இள கபில
13.09.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 544,788,476.20
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2395
சீட்டிழுப்பு திகதி 2024.09.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,708,525.60
51 57 58 64 O
385596
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (341)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## IELTS - New Batch ஆரம்பம்

Free Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
G.C.E(O/L) மாணவர்களுக்கான English past paper Class ஆரம்பம் (1934)

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மகள் தேவையெனின் எம்முடன் தொடர்புகொள்ளவும். (1865)
+16476571347
+14372446737
077 240 92 76

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322 Visit Visas
077 77 19 322 Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1180)

## மணப்பெண் தேவை

- கோண்டாவில் - கல்வியங்காடு. இந்து. கௌரவ குடும்பம், 1990, ரேவதி, Phd in Engneering, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34935
- தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1988, உத்தரம், Bsc Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 34337
- காரைநகர் , இந்து, கௌரவ குடும்பம், 1989, சித்திரை, Graduate, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை , இந்து, கௌரவ குடும்பம், 1990, அவிட்டம்,Bsc(Hons), கனடா, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பருத்தித்துறை , இந்து, கௌரவ குடும்பம், 1987, உத்தரம்,Bsc, ACMA, CGMA Senior Finacial Analyst, Canada மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரம்பன் - Jaffna Town, இந்து, கௌரவ குடும்பம், 1988, ரோகினி, Bsc Engineer, கனடா, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 28033
- உரும்பிராய் - இணுவில், இந்து, கௌரவ குடும்பம், 1991, பூரம், Network Engineer, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 29309
- கந்தர்மடம், இந்து, கௌரவ குடும்பம், 1989,உத்திராடம், Msc, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவ குடும்பம், 1986, திருவோணம், BBA(Hons), CIMA Fully Qualified, UK, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1933)
S.Sharma J.P - 077 539 3728
www.thaalee.com - 077 803 8193

## WIN REPAIR

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகிறோம். வீட்டுப் பெயின்றிங் வேலைகளும் செய்து கொடுக்கிறோம். (1931)
தொடர்பு: 076 834 6136

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
CIMS College 49A, Chapel Street,Jaffna. (C-1180)
College Of International Migration Skills
0777 068 777 / 0777 7719 322

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்.
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை.
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்.
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- சீரான ஆவணங்கள்.
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில். (1932)

பார்வையிடும் நேரம்
காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு :
077 623 4204 / 077 030 2523

## வேலைவாய்ப்பு

எமது காட்சியறைக்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான ஆண்/ பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றனர். (C-1179)
- விற்பனை பிரதிநிதி
- காசாளர்
- களஞ்சிய பொறுப்பாளர்
- களஞ்சிய உதவியாளர்கள்
- விற்பனை உதவியாளர்கள்
- அலுவலக உதவியாளர்கள்

பொருத்தமானவர்கள் 16.09.2024 நேரில் வருகை தரவும்.
**Mega Ceramic Mall**
No.469, K.K.S Road, Jaffna.
021 221 3903

## உடனடி வேலை வாய்ப்பு

பல்கலைக்கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்வதற்கு தொழிலாளர்கள் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (C-1178)
மேலதிக விபரங்களுக்கு: 077 048 1489
இல.758, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். சாவகச்சேரியில் 4 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-9 வீதியில் இருந்து கல்வயில் செல்லும் பிரதான காபெற் வீதி முகப்புடன்
- A-9 வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- சாவகச்சேரி பஸ் நிலையம் 1 ½ Km தூரம்
- சாவகச்சேரி மகளிர் பாடசாலை 1 Km தூரம் (1935)

தொடர்புகளுக்கு:
077 294 1521, 077 329 4130


## 31ம் நாள் அந்தியேட்டி நினைவலைகள்

### அமரர் நேசரத்தினம் ஞானவதி

மலர்வு 1978.08.11
உதிர்வு 2024.08.16



திதி : பூர்வபக்க துவாதசி

என்றும் இனிதே நாம் வாழ
அத்தனையும் ஈந்தவளே
கண்ணிமையாய் எமைக்காத்து
ஞாலம் போற்றும் வாழ்வு தந்த
ஞான ஒளியே!
நீ மறைந்தாலும் மறையாது
உன் நினைவலைகள்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

16.08.2024 அன்று இறைபத மடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக்கிரியைகள் 15.09. 2024 ஞாயிற்றுக்கிழமை அதாவது நாளை அதிகாலை இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியம் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

வீரபத்திரர் கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. (1929)
இங்ஙனம் குடும்பத்தினர்


## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 240/= | Max5kg | |
| 1 Kg prima கோதுமை மா | - 159/= | | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 376/= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 269/= | | |
| 1 Kg றவை | - 284/= | | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 799/= | | |
| 1 Kg செத்தல் மிளகாய் | - 699/= | | |
| 1 Kg மல்லி | - 380/= | | |
| 1 Kg கீரி சம்பா அரிசி | - 240/= | | |
| 400 g சஸ்ரயன் | - 3399/= | ~~3900/=~~ | |
| 01 சன் பப்படம் | - 185/= | ~~235/=~~ | |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~165/=~~ | |
| 01 Ocean மீன் ரின் | - 340/= | ~~500/=~~ | |
| 400 g வட்டவல தேயிலை | - 999/= | ~~1120/=~~ | |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ | |

400g Anchor
1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (341)
Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.